விலை 20/=
ISSN-2613-828X

# யாழ் களரி

www.yarlgallery.com
yarlgallery@gmail.com

உதயம்: 02 | பங்குனி 2019 | களரி: 02



## விடுதலைக்குப் போராடும் ஈழத்துத் தமிழ் மக்கள்

## உலக அரங்கில் தமிழ்

வாழுமா? தாழுமா? திர்மானிப்பது யார்?



## தவணை கேட்டவர்கள் தலைமறைவாகியது ஏன்?

நீ உருவாகி பிறரை உருவாக்கு

# நாட்டின் காலநிலை



கோணாவிலில் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த ஜனாதிபதி முன்னின்று பாடசாலை மாணவர்களுக்கு விழிப்பூட்டியதால் மாணவர் ஒருவர் இனம் காட்டிய போதைப்பொருள் வியாபாரம் அதன் பரிசாக மாணவன் தாக்கப்பட்டு கால் முறிந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.



மறுநாள் பாடசாலைக்கு சென்று மிரட்டிய கும்பல் அப்பாடசாலை மெய்வல்லுநர் போட்டியை நிறுத்துமளவிற்குப் போதைப்பொருள் வியாபாரம் சுதந்திரமாக நடைபெறுகிறதா? மாணவனின் எதிர்காலம், பாதுகாப்பிற்கு யார் பொறுப்பு?இரண்டாவது வருடங்களை

## நழுவும் காலநிலை



படித்த பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பு 50ஆயிரம் பேருக்கு வசீட்டுத்திட்டம் 50ஆயிரம், சிறைக்கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு எனக்கூறி எம்மவருக்கு கயிறு கொடுத்து தமது ஆட்சியை தக்க வைத்தவர்கள் எவரும் எம்மவர் விடயத்தில் அக்கறை காட்டவில்லை. ஆறு கடக்கும் வரை அண்ணன் தம்பி உறவு அது கடந்ததும் நீயாரோ, நான் யாரோ என கேப்பாபிலவு மக்களின் கதையோடு, பட்டதாரிகள் வேலைவாய்ப்பும், வீட்டுத்திட்டங்களும் மெல்ல நழுவும் காலநிலை தொடர்கிறது.

## இரண்டாவது வருடம்

இரண்டாவது வருடங்களை எதிர்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் செவிடன் காதில் ஊதப்படும் சங்காகி விட்டதோ என வவுனியாவில் மேற் கொண்ட மாபெரும் போராட்ட ஊர்வலம் வந்து காணப்பட்டவர்களின் கோரிக்கைகளை ஐ.நாவுக்கு முன் வைத்தனர். இதுவும் இன்றைய காலநிலை தான்.

# மெல்லத் தமிழ் இனி...

தமிழுக்காகக் குரல் கொடுப்போர் பலராகப் பல விடயங்களையும் சுட்டிக் காட்டி வருவது வரவேற்கத் தக்கது. இதனால் அரசகரும மொழிகளாக ஏற்றுக் கொண்ட தமிழ்மொழியை நடைமுறைப்படுத்துவதில் உள்ள அலட்சியம் பல நிறுவனங்களில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள அலட்சியம் பல நிறுவன வெளியீடுகள், விடயங்களைக் காட்டும் அக்கறையிலும் பல பெயர்ப்பலகையில் கூட தமிழ் இடம்பெறாதமையும், எழுத்துப்பிழைகளாக வெளியிடப்படுவதும், காட்சிப்படுத்தப்படுவதும், அதனைச் சுட்டிக்காட் தவறும் தமிழ் உத்தியோகஸ்தர்களாலும் அக்கறைப்படாது ஒதுங்குவது மெல்லத்த தமிழ் இனிக் காணாமல் போக வாய்ப்புக்கள் எமது நாட்டில் ஏற்படுவதற்கு எம்மவரே காரணமாகலாமா?

உரிமைக்குக் குரல் கொடுக்கும் எமது செயல்களில் நாம் காட்டும் அக்கறையீனமும், அலட்சியப் போக்கும் எம்மிடமிருந்து களைய முயற்சி செய்தல் உரிமைக்காகக் குரல் கொடுப்பதுடன் நின்றுவிடாது செயல்பட முன்வருவீர்களா?

எமது முன்மாதிரிகளில் நாம் எந்த மொழியில் கையொப்பம் இடுகிறோம் எமக்குத் தரப்படும் படிவங்களில், விண்ணப்பங்களில், வங்கிஅரச படிவங் களில் தமிழ் மொழி இருந்தும் அதனை நிரப்புவதில் நாம் காட்டும் அலட்சியம் எமது மொழிப்பயன்பாட்டை நாமே தவிர்த்தல் ஏற்றுக் கொள்ளலாமா? தவறுகளில் இருந்து நாமாக மாறும் போதே உரிமை காக்கமுடியும் என்பதனை மாற்றானால் அழிவை ஏற்படுவதை விட எம்மால் அழிவிற்கு துணை போவதாக இராது நமது பயன்பாட்டில் எம்மைப் போற்றி பிறரை மாற்ற ஆங்கில மோகத்தை விட்டு இனிவரும் காலத்திலாவது எமது தவறைத் திருத்தி தமிழ் மொழியில் கருமங்களைச் செயற்படுத்த திடசங்கற்பம் எடுத்துக் கொள்ளலாமா?

முன் மாதிரியான செயல்களை முன்னின்று செயல்படுத்துவதை எதிர் கால சந்ததிக்கு வழிகாட்டலாக அமையும். சகலரும் ஒன்றிணைந்து செயல்பட்டால் தமிழ்மொழி செயல்பாட்டிற்காக தமிழர்களுக்கு அதிக வேலை வாய்ப்புக்கள் கூட ஏற்பட வாய்ப்புக்கள் ஏற்படும் அல்லவா?

தமிழுக்கா குரல் கொடுப்பதில் மட்டுமல்ல பத்திரிகைகளில் அறிக்கை விடுவதில் மட்டுமல்ல மொழியைப் பாதுகாப்பதுடன் செயல்படுவதிலும் எமது உரிமைகளை நாமே பாதுகாக்கவும் முன் வருவதில் நம் நாட்டில் தமிழ்மொழி வாழ வாழி பிறக்கும். இவை கூடத் தமிழ் இனி அழியாது காக்கும் கரங்களாக கரம் கோர்த்து செயல்படுவோரே குரல் கொடுக்கவும் தகுதி உடையவர் என்பதனை செயலால் வெளிப்படுத்துவோமா?

# எமது அடையாள எச்சங்கள்

ஒரு இனத்தின் அடையாளங்கள், மொழி ,இசை, கலைவடிவங்கள் ,ஆன்மீகம், ஆடை, அலங்காரங்கள், உணவு, பண்பாடுகள், கட்டடக்கலைகள், தொழில் என பல வடிவங்களாகும், இதில் பல காலத்தினால் அழிந்து அலட்சியத்தால் கரைந்து போவது ஓர் இனத்தின் இருப்பை அழிக்கும் செயலாகும். அதற்கு தம்மை அறியாமலே இணைந்து போவதும் அயல் நாட்டு நாகரீக மோகத்தை தமதாக எண்ணி போலியாக வேசம் போட்டு பெருமைப்படுத்தும். நம்மை நாமே ஏமாற்றி அடையாளங்களை அழிக்கின்ற செயலாகும்.

முன்னையகாலங்களில் எமது முன்னோர் விருந்தோம்பல் உபசரிப்புக்கு முன் உரிமை கொடுத்து வாசலில் பிறர் தங்கிச் செல்லும் மகுடம் இட்டு தாகசந்திக்காக தண்ணீர் பநடதலிட்டு வீட்டடிலும நாற்சார் வீடாக விருந்தினர் தங்கிச் செல்லவும்,விருந்துணவாகவும் மற்றய சூழலை ஏற்படுத்தியதுடன் குளிர்மைக்கான கட்டிடக்கலைகள் செங்கல்லினால் முருகைக்கல்லினால் ஆன கட்டிடங்களில் பல்வேறு கருத்தோவியங்கள் செதுக்கிவைத்த எச்சங்கள் சில இன்றும் மிஞ்சி இருப்பதை கானமுடியும். அதன் சிறப்பை ஆழமாக ரசனைப்பண்பில்லாமல் அன்னிய நாகரீக மோகத்தாலும் அரச உதவி கருத்தாகவும்.இடித்து உடைத்து பாவித்து நிரப்பும் கைக்காரியத்தில் ஈடுபடுவோரே அதன் அருமை புரியாது தமது பிளைப்புக்காக அடையாளங்களை அழித்து வருவது காணகூடியதாய் கானமுடியும் இதை வெளிப்படுத்துவோர் பழைமை வாதழயாக, நாகரீகம் தெரியாதவராக நவீனத்தின் நிலை புரியாதவர் என பட்டம் சூட்டி பழமைமைக்கு சவாலாக செயல்படுவோர் அதன் சிறப்புக்கள பற்றிய தெளிவின்மை உடையவராக அடையாளங்கள் ஏன் இனத்தின் இருப்புக்கு சாட்சி பகிர்கின்ற எங்கள் நாட்டுச் சூழல் சுவாத்தியம் பற்றிய சிந்தனை இல்லாதோராக தூர நோக்கற்ற சிந்தனை திறன் அற்றவர்களாவர் பாதிக்கப்படுவது பற்றிய பொறுப்பற்றவர்களின் ஈனச் செயலாக கொள்ளமுடியும்.

இன்று பல வடிவமைப்பாளர் என்போர் மாடிகள் முதல் வீடுகள் வரை மாற்றம் பெற்றதுடன் பொது வழிபாட்டுத்தலங்களும்,எமது நாட்டு சூழலுக்கு ஏற்றதாக கட்டப்பட்டது அந்நிய நாட்டு முறையில் கட்டப்படும் அலங்கரிக்கப்படுவதாலுமே பல நோய்கள் வர காற்றோட்டம் இன்மையாலும் சூரியக்கதிரின் தாக்கத்தால் ஏற்படும் வறட்சி, புற்றுநோய், போன்ற பல நோய் காவிகளாகவும் மாறும் நிலைக்கு கூரையில் போடப்படும் அஸ்பெஸ்ரர்சீற், பீலிதகரம், பிளாஸ்ரிக் கூரைகள் போன்றவை அழகும் பொலிவும் வெளிநாட்டவரின் விளம்பரங்களில் அடிமைப்பட்டவர்களாக எமது நாட்டுக்கு ஏற்ற குளிர்மை தரக்கூடிய பல வடிவங்களையும் மாற்றி எங்கள் நாட்டின் கட்டிடக்கலை அழகையும் இழந்துள்ளோம் என்பதனை தூர நோக்குடன் சிந்திப்பார்களா?

மேற்கத்தைய தேசங்களில் இன்றும் தமது கலாச்சார வடிவங்களை புனரமைத்தும் அழகூட்டியும் பாரம்பரியத்தின் அடையாளங்களை காத்த வருவது எம்மவர்களுக்கு புரியாது போனது ஏன்? நிதிநிறுவன உதவித்திட்டங்களை பெறுவதற்காக எம்மிடம் இருந்த கட்டடக்கலையை அழித்ததை தாமே சிந்தித்து பார்த்தால் புரியும் இவை உயர் மட்டங்களினால் மேற்கொள்ளப்படும் தனித்தவ அழிப்பு முயற்கிகளே ஆகும். இது போலவே நாம் பாவித்த வீட்டு உபகரணங்களில் எவை இன்று எம்மிடம் எமது இல்லத்தில் உண்டு என்றால் மிக்சி, கிரைண்டர், குளிரூட்டி, வோஸிங்மெசின், என தெரியப்படுமே தவிர கல்லூரல், மரஉரல், அம்மி, குளவி, குத்துவிளக்கு, மண்பானை, சட்டி, தூண்டாமணி விளக்கு, குழந்தைகளுக்கு பாலூட்டும் பாத்திரத்தில் இருந்து பாட்டியின் பாக்குவெட்டி, வெத்தலை இடிஉரல், வரை அழிக்கப்பட்ட மேற்கத்தையோர் வந்து அழகு என அடையாளங்களாக வாங்கி சென்றவை எமது சொத்துக்களாகவே இருக்கும்.

இவை போன்ற பல கலை வடிவங்கள் ஓலைச்சுவடிகள் வரலாற்று பெட்டகங்கள் முன்னோர் பலர் மனதில் எழும் நினைவுச்சின்னங்களாக வெளிப்படும் இதில் சுதேச வைத்தியரும் போர் பயிற்சிக்காலங்களும், இசை மீட்டு ரசித்த பல இசைக்கருவிகளும், ஆபரணங்களும் பல பெயர்களில் உருமாறிய அடையாளச்சின்னங்களாக மனதில் பதியும் இதில் எவற்றை எமது சந்ததிக்கு ஞாபகமூட்டவைத்துள்ளார்கள் இவை எல்லாம் எம் முன்னோர்களின் அடையாளங்கள் அல்லவா?

இது போன்றே உங்கள் பிள்ளைகளுக்கு பெயர் வைப்பதில் கொண்ட ஆர்வம் இன்று என்ன மொழியில் எந்த நாட்டவரின் எந்த ஆன்மீக நினைவூட்டலில் வைக்கப்படுகிறது பிறந்த பிள்ளைகளின் மனதில் விஸத்த ஆக்கியவர்கள் யார்? அவர்களின் பெயருக்கு அர்த்தம் கேட்டால் எதனை கூறுவார்கள் இதற்கு யார் பொறுப்பு உங்கள் செயல்களைத்தானே அடுத்த தலைமுறையினருக்கு கடத்தப்படுகிறது என்றால் எந்த அடையாளம் நிலைக்கும் இனம் மொழி நாடு என சேகரிப்பதில் குளிர் காயும் அரசியல், சமய,சமூக வாதிகள் தம் சூழலில் அழித்தவை அழிக்கப்பட்டதில் பார்வையாளராக பாதுகாப்பாளர்களா என சுய ஆய்வுக்குள் சென்றால் எமது அடையாள எச்சங்கள் எது உள்ளது இப்பதில் இருந்தாவது எமது இருப்புக்களை பலமாக்க முன்வருவோரின் கருத்துக்கள் பகிர களம் உண்டு மனப்பதிவை எழுதுங்கள் பகிருவோம் இன்னும் பல

நற்பணி
சாதனையாளர்
விருது
"2019"

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த
இளையோர் மற்றும்
சமூகசேவை ஆர்வலர்களே!
உங்களை
சாதனையாளர்களாக
உருவாக்கி
"வடக்கின் சாதனையாளர்
நற் பணி விருது"
"கிழக்கின் சாதனையாளர்
நற்பணி விருது"
என்ற பிரிவுகளில்
நினைவுக் கேடயமும்,
சான்றிதழும் வழங்கி
மதிப்பளிக்கும் செயல்திட்டம்

இந்தப் பலப்பரீட்சையில்
பங்குபற்ற
நீங்கள் தயாரா........
மேலதிக விபரங்களைப் பெற
விண்ணப்பியுங்கள்

077-6510375

இலங்கை
பல்சமய கருத்தாடல் நிலையம்
28/1, ஏ.வி வீதி, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

# யாழ் கவரி

Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/Viber: 077 6510375
பங்குனி



## உலக அரங்கில் தமிழ் வாழுமா, தாழுமா என்பதனை தீர்மானிப்பது யார்?

குருமுதல்வர் ஜெபரெட்ணம் அடிகள்

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் 3வது நினைவுப் பேருரை யாழ்திருமறைக்கலாமன்ற மண்டபத்தில் அருட்பணி அ.பி.ஜெயசேகரம் அடிகள் தலைமையில் நடைபெற்றது. "திருக்குறளும், தமிழ்த்தேசியமும்" என்ற தலைப்பில் இந்தியாவில் இருந்து வருகை தந்த மாதா தொலைக்காட்சியில் பணியாற்றும் அருட்பணி தமிழ்நாடு டே.கே.பெனிஇளங்குமரன் அடிகள் சிறப்புரையாற்றினார். உலக அரங்கில் தமிழ்மொழி பயன்பாட்டு பழக்கவழக்கங்கள் இன்றும் வாழ்ந்து அவை ஒரு சிகரமாய் முன் எடுக்கப்பட்டு வந்த போதும் மூன்றாவது தலைமுறையினரின் மட்டில் கல்வச்சூழல் அன்றாட்டு மொழியுடன் ஆங்கில ஆக்கத்தினாலும் தமிழ்மொழிப்பயன் பாடுகள் அருகி வருதல் கவலை அழிப்பதாகவே உள்ளது.இதனை துளிர்ப்பிக்கும் முயற்சி தனிநாயகமன்றத்தின் முயற்சியாகும் என அருட்பணி ஜெகசேகரம் அடிகள் தெரிவித்தார். தனிநாயகம் அடிகளாரின் வாழ்வும் தேடலும் உலக தமிழர்கள் மட்டில் ஏற்பட்ட விழிப்பூட்டல் தமிழாராச்சி மகாநாட்டின் மூலமும் அவரது அயராது முயற்சிகளாலும் தமிழின் சிறப்பை பல்வேறு தளங்களில் பலபதிவுகளை ஏற்படுத்தியதை நினைவூட்டவும் அவரது நினைவு மீட்டுக்கொள்வதன் மூலம்

(தொடர்ச்சி பக்கம் 10)

## பல்சமய மனங்கள் ஒன்றிணைந்து அன்பு பூந்தோட்டமாக அழகாக்க வேண்டும்



சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசனந்தா

யாழ்ப்பாண மவட்ட கலாசார சபையயின் கலை கலாசார மேம்பாட்டு வேலைத்திட்டத்மின் கீழ் "மத நல்லிணக்கம் பேணுவோம்"எனும் விழிப்புணர்வு நிகழ்வு யாழ்பிரதேச செயலக மண்டபத்தில் மாட்டகலாசார அதிகாரசபைத்தலைவரும் மேலகத்து அரசாங்க அதிபருமான திருமதி சுகுனா ரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்றது.சிறப்புரைகள் மதத்தலைவர்களான அருட்பணி அ.பி.ஜெயசேகரம் அடிகள், வளகொங்கல ஞீமத்திம தேரர் (யாழ் நாகவிகாரை)அல்காஜ் A.M.A.சுசீஸ்மௌலவி.சுவாமி சிதாகாசானந்தா சிம்பியாமிசன் தலைவர் ஆகியோர் உரையாற்றினர். இதில் கலந்து கொண்ட கலைஞர்கள் மாணவர்கள், கலாசார அதிகாரசபை உறுப்பினர்கள் நிறைந்த மண்டபத்தில் சிம்மியாமிசன் சுவாமி சிதானசானந்தா சிறப்புரையாற்றுகையில் ஒவ்வொரு பூக்களும் தனித்துவமானவை மல்லிகை,றோசா,செம்பரத்தை,நித்தியகலியாணி என பல்லாயிரம் பூக்கள் மலரும் காட்சி மனதுக்கு மகிழ்ச்சி தரும்.அதிலும் ஒரு பூக்கூட்டம் கொண்ட தோட்டங்களை விட எல்லாபூக்களும் ஒரே இடத்தில் பூத்துக்குலுங்கும் அழகோ தனியானது.அதனை பூந்தோட்டங்களாக பார்க்கும் போது உள்ள அழகை போன்றதே எம்மனிதர்கள் வாழ்வும் மதங்கள்,மொழிகள்,நிறங்கள்,சாதிகள்பேதமின்றிய சர்வமத இன, மொழி தங்கள் தனித்துவங்கள் மாறாது நல்லிணக்கத்துடன் ஒற்றுமையாக வாழும் தோட்டமே அமைதிப்பூங்காவாக மாறும் நல்ல மனங்கள்,நல்ல செயல்கள்,நல்ல எண்ணங்கள் ஒன்று பட்டு எதிர்கால சந்ததிகள்மகிழ்வுற நல்லிணக்கத்தின் மனங்களை கட்டி எழுப்புவதே தேச அமைதிக்கும் மத ஒற்றுமைக்கும் சிறப்பை தரும்.என் யாழ் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற "நல்லிணக்கம் பேணுவோம" என்ற கருத்தமர்வில் சிறப்புரை ஆற்றிய சிம்மியாமிசன் சுவாமி சிதாகாசானந்தா தெரிவித்தார்.

## மன்னாரின் மர்மம்



மன்னாரிலிருந்து உயிரோடு பிற மாவட்டங்களுக்கே செல்லாத 380க்கும் மேற்பட்ட பலரது உடலங்கள் எலும்புக்கூடுகளாக அமெரிக்கா புளோரிடா மாநிலத்துக்கு பலரது பாதுகாப்புடன் சென்றுள்ளது. இப்படி செல்லக் கிடைத்தவர்கள் யார், யாரால் இக்கதி நேர்ந்தது என்பதைக் கண்டு பிடிக்க முடியாத காலநிலை நமது நாட்டில் இன்றும் பல வருடங்கள் பேசுபொருளாகலாம்.

## ஆன்மீக கலை, கலாசாரங்களிலும் மாணவர்களைப் பங்கேற்க வழி காட்ட வேண்டும்

கத்தோலிக்க இலக்கியவட்ட தலைவர்
குயின்ரஸ் திருஞானம்



கத்தோலிக்கக் கலைஇலக்கிய வட்டத்தின் 33வது ஆண்டுக்கான நிர்வாகக் கூட்டமும், ஒன்றுகூடலும் யாழ்ப்பாணத்தில் தலைவர் திரு.குயின்ரஸ் திருஞானம் தலைமையில் நடைபெற்றது. தலைவர் கருத்துரை வழங்குகையில், எமது கலை, கலாச்சார வடிவங்கள் அடுத்த தலைமுறையினர் பயன்படுத்தப் பாதுகாக்கும் வண்ணம் எதிர்காலத் திட்டமிடல் அமைவதற்கு சகல மட்டத்தினரின் பங்களிப்பு அவசியமாகும். இதனை முன்னெடுப்பதற்குஅடைவதற்கு சிறுவர்களிடம் சென்றடையக் கூடிய வழிகளை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் என்றார். தொடர்ந்து உரையாற்றுகையில் மாணவர்கள் மட்டில் கலையார்வம், ஆன்மீக ஆர்வம் வளர்ப்பதில் பெற்றோர் அக்கறையுடன் செயற்பட வேண்டும். கல்வி இன்று வர்த்தக மயமாக்கப்பட்டு அதில் மட்டும் அக்கறைப்பட்டு ஓய்வின்றி அலைவதாலே மாணவர்களிடம் ஆன்மீகம், கலை, கலாச்சாரப் பண்புகள் அருகி வருகின்றது. அதனால் ஏற்படும் தாக்கமே சமூக சீரின்மைகள் வளரக் காரணமாகியது. அறநெறிக் கல்வியிலும் ஆர்வமூட்டும், மகிழ்வூட்டும் வழிகளை பொறுப்பு மிக்கோர் கையாள்வதே காலத்தின் தேவையாகும். ஆன்மீக வழிகாட்டிகளும்,

(தொடர்ச்சி பக்கம் 10)

## தவணை கேட்டவர்கள் தலைமறைவாகியது ஏன்?

பிரித்தானியாவில் மகஜர் கையளிப்பு

பிரித்தானியா சிறப்பு நிருபர்



இனப்படுகொலை புரிந்த இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதை சிபார்சு செய்யக் கோரி பிரித்தானியப் பிரதமருக்கு இனப்படுகொலையைத் தடுப்பதற்கும், தண்டிப்பதற்குமான சர்வதேச மையம், (ICPPG) என்ற அமைப்பினால் மனு ஒன்று கையளிக்கப் பட்டது. ஜெனீவா ஐ.நா கூட்டத்தொடரில் பிரித்தானியா தலைமையில் மீண்டும் பிரேரணை கொண்டுவரப்படும் நிலையிலேயே பிரதமர் வாசஸ்தலத்தில் இந்த மனு கையளிக்கப்பட்டது. குறித்த மனுவில் மூன்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இறுதி யுத்தத்தில் இழைக்கப்பட்ட யுத்தக்குற்றம் தொடர்பில் ஐ.நாவினால் கொண்டுவரப்பட்ட 30–1மற்றும் 34–1 பரிந்துரைகளை நிறைவேற்ற இலங்கை அரசிற்கு இருவருடகால அவகாசங்கள் வழங்கியும் அவற்றை இலங்கை அரசு செயற்படுத்தத் தவறியுள்ள நிலையில் இம்முறை மீண்டுமொரு கால அவகாசத்தினை வழங்கக் கூடாது. இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முற்படுத்துவதற்கு அல்லது நடுநிலையான சர்வதேச நீதிமன்றம் ஒன்றை உருவாக்குவது தொடர்பாக

(தொடர்ச்சி பக்கம் 11)

# நோய்க்காவிகள் பெருக நாமே பங்காளரா?



புதுப்புது நோய்க்காவிகள் நாடு பூராவும் பரவி வருகிறது. அதனால் ஏற்படும் தாக்கத்தில் நாம் தப்பிக்க வழி உண்டா? இதுவே எல்லோர் மனங்களும் எண்ணிக் கொள்ளும். ஆனால் நோய்கள் பரவுவதற்கு நாமும் காரணமாக இருக்கலாமென அதனை ஏற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டுவோரே அதிகம்.

தொற்று நோய், தொற்றாநோய் என எல்லா நோய்களும் எமது குடும்பத்தில் உண்டா? அதனை வரவேற்பதற்க நாம் காரணமாகலாமா? எமது சுற்றுச்சூழல், உணவுப்பழக்கங்கள் யாவும் எம்மைப் பாதுகாக்க நாம் என்ன முயற்சிகள் மேற்கொள்கிறோம்.

இயற்கை சுற்று சூழலில் காற்று, நன்நீர், சூரிய வெளிச்சம் நாம் எதுவித பணம் கொடுக்காமல் இயற்கை தந்த பரிசாகும். அதனை சுத்தமாக வைத்திருப்பதில் எமது தூரநோக்கற்ற பழக்கவழக்கங்களால் வேலிகளில் நாட்டப்பட்ட கிளிசெறியா, பூவரசு, முருக்கு போன்ற வேலிக்கதியால்களும் சூழ உள்ள செம்பருத்தி, மல்லிகை போன்ற பூவினங்களும் தந்த சுகந்த காற்று சுற்று மதில்களால் அழிந்தொழிந்தது. எமது வீட்டுச் சூழல் கிடுகினால் வேயப்பட்ட கூரைகள் ஓடுகளாகி பின்னர் அஸ்பெஸ்ரர் சீற்றுக்களாகி, தகரங்களால் சூட்டு நோய்கள் புற்றுநோய்களானது. மலசல கூடமும், அயல்வீட்டுக்கிணறகளும் அருகாகி நீர் கலந்து நன்நீர் நச்சு நீரானது. எமது குப்பைகூளங்களில் பொலித்தீன் பாவனைகள் நிலத்தை மலடாக்கி எதுவும் பயிரிடமுடியாது. தற்போது முற்றங்களும் சீமெந்து கற்களாகி பூமி மூச்சு விட முடியாத நிலையும், கடற்கரைகளும் பொலித்தீன் குப்பைகளால் சுற்றுச் சூழல் எதிர்கால சந்ததியையும் நோய்க்காவிகளாக மாற்றி அமைப்பதன் பங்காளியாக உள்ளோம்.

நாம் பங்காளியாக இருக்கவில்லையெனில் பார்வையாளரும், பங்காளிகளான எமது உணவுப் பழக்கங்கள் எதிர்கால சந்ததிகளின் வாழ்வுக்கு எதைக் கற்றுக் கொடுத்துள்ளோம். அவர்களின் அன்றாட உணவாக எதைக் கொடுத்து பழக்கி வருகின்றோம். பிள்ளைகளுக்கான உணவில் உடல் பாதுகாப்பு பற்றிச் சிந்தித்து உணவூட்டுகின்றோமா?

பசுப்பால், அரிசிமாபிட்டு, ஊர் அரிசிச்சோறு, நச்சு உரப்பவனையற்ற எமது வீட்டுத்தோட்டப் பயிரில் விளைந்த மரக்கறி வகைகள், ஊர்க்கோழிமுட்டை, எமது தோட்ட வாழை என எமது முயற்சியில் விளைந்த உணவுகளில் உரமிடாத பயிரின் உணவுப்பண்டங்கள் தேசி, தோடை, மாதுளை, மாம்பழம் எல்லாம் உணவுப் பண்டங்கள் எமது முயற்சியில் விளைந்தவை ஆரோக்கியத்திற்கு உகந்தவற்றை தேடித் தேடிப் பிள்ளைகளின் எதிர்காலத்தைத் திட்டமிட்டுக் கொடுத்ததால் ஆரோக்கிய பிள்ளைகள் ஒடியல், எள்ளுருண்டை, பினாட்டு மூலம் பலமானவர்களாக நோய் எதிர்ப்பு சக்தி உடையவராக வாழ வைக்கிறோம் எனத் திருப்திப்படுவோம். எமது முயற்சியை பெருக்கி வீட்டை



சுத்தப்படுத்துவதோடு சுயமுயற்சியில் நஞ்சற்ற உணவை நாமே செய்வோம்.

## காலி/யாழ் மறைமாவட்ட சர்வமதக் குழுவினரின்
# குழுப்பரிமாற்றல் நிகழ்வு





காலிமறைமாவட்டகரித்தாஸ் செற்கோல் இயக்குனர் அருட்தந்தைகேமன் பெர்னான்டோ தலைமை யில் சர்வமத சகவாழ்வுகுழுவின் 44 உறுப்பினர்கள் யாழ்மறைமாவட்டகரித்தாஸ் கியூடெக் சர்வமதகுழுவினரை26.01.2019 அன்று சந்திக்க வருகைதந்தனர். கியூடெக் கரித்தாஸ் இயக்குனர் அருட்தந்தை இயூஜின்பிரான்சிஸ் அடிகளார் சர்வ மத குழுவினரை வரவேற்று மதிய விருந்தளித்து அல்லைபிட்டி கிராமத்தில் தமிழ் கலாசாரபொங்கல் நிகழ்வினை கொண்டாடி அல்லைப்பிட்டி 1ம் வட்டாரத்திலும் வெண்புரவி நகரிலும்உள்ளசர்வமதகுழுவினர் இல்லங்களி



லும் தங்கிஇன மதஉறவுப்பரிமாற்றத்தைபலப்படுத்தினர்.

இரண்டாம் நாள் நயினாதீவில் உள்ள சர்வ மத தலங்களையும் சர்வமதகுழுவினரையும் சந்தித்து அனுபவப் பகிர்வினை பகிர்ந்து கொண்டதுடன் மாலைசாட்டி முஸ்லிம் பள்ளி வாசலில் சமய சமூக தலைவர்களுடன் கலந்துரை யாடினர்.சாட்டி கடற்கரையினை சிரமதானப் பணி மூலம் சுத்தப் படுத்துவதில் காலி.யாழ் சர்வமததலைவர்கள் குழுவினர் ஆர்வமுடன் பங்கேற்றனர். மாலை அல்லப்பிட்டி வெண்புரவிநகரில் கலாச்சாரபண்பாட்டுகலைநிகழ்வுகள் அனுபவப்பகிர்வு மூலம் மனஉணர்வுகளைப் பகிர்ந்து கொண்டனர். மதநல்லிணக்கம் மனிதாபிமானப் பணிகள் மூலம் நல்லுறவை பலமாக்கும் முன் மாதிரியான செயல்களில் மக்கள் ஒன்றிணைவது சர்வமத சகவாழ்வின் நல்லுறவை பலமாக்குவோம்.

## மனிதா விழித்தெழு

மனிதா விழித்தெழு
மாண்பு மிகு மானிடனே விழித்தெழு
மனிதம் மரணித்ததேனோ
மண்ணாய் போன இந்தப் போதையினால்
மனிதா விழித்தெழு

கடவுளின் படைப்பினில் நீயும் புனிதமானாய்
கடன் வாங்கி நீயும் மதுவிற்கு அடிமையானாய்
கடைசியில் நீயும் சீர் குலைந்தாய்
கல்வாரி சிலுவையும் உடைத்தாய்
மனிதா நீயும் விழித்தெழு

பல போதனைகள் உனக்கிருந்தும்
போதைக்கு நீயும் அடிமையானாய்
போர் எமை கொன்றது போதாதா – நீயும்
போதைக்கு ஏன் தான் அடிமையானாய்
மனிதா நீயும் விழித்தெழு

போதைகள் இன்று போர்க்களங்களாகி
போரிட உனையும் வைத்ததேனோ
போரிட நீயும் தயாரானாய்
போதையை நீயும் வென்றிடுவாய்
மனிதா நீயும் விழித்தெழு

## உருவை மாற்று

மனிதமே மனிதமே
மனமிரங்க மாட்டாயோ
எனக்காக அல்ல
உனக்காக மாற மாட்டாயா?
மனமிரங்க மாட்டாயா?

சில்லறை பொறுக்கி
காசிக் கடையில்
கசிப்பு வாங்கி வந்தாய்
காலடியில் கலங்கும் – உன்
குழந்தை முகம் மறந்தாய்

நிதானமிழந்து நின்றாயோ
நிற்குமிடம் அறியாமல்
இழந்தவை இழப்பு என்று
இழுபறியில் குடித்தாயோ
இருப்பவரையும் இழந்திடுவாய் என்று
இன்று வரை ஏன் உணராய்

நிமிடங்கள் தேடினாய்
கைகளை பார்த்தாய்
கைப் பைகளைத் தடவினாய்
காணவில்லையென்றால்
நீயாய் எழுந்தாய்

சத்தங்களால் யுத்தம் செய்தாய்
மதியிலும் மதியின்றி போனாய்
மதுவே தேவை என்றாய்
மண்ணுக்குள் செல்ல வழி தேடினாய்
மனிதா மனிதா மாற வேண்டும் நீ
மாறிட வழி கண்டிட வேண்டும் நீ
சிந்தனைகள் உன்னுள் எழுந்திட வேண்டும்
சில்லறை எண்ணங்களை எறிந்திட வேண்டும் – நீ

வீட்டின் விடிவெள்ளிகள் குழந்தைகள்
விடிவெள்ளியாய் எழ நீமாறிடவேண்டும்
சுயத்தை மாற்றிட வேண்டும் – நீ
சூழலை உணர்த்திட வேண்டும் – நீ

தினம் தினம்தேடும் தேடல்கள்
எதிர்கால உன் குழந்தைக்காய் மாறட்டும்
மாற்று உன் தேடலுக்காய் மணித்துளிகளை
உருவையும் மாற்று உலகையும் மாற்று.

- ராஜசோபனா -

# அருட்தந்தை சரத்ஜீவன் உதவித்திட்டம்

35மாணவர்களுக்கு மேசை,கதிரைஎன்பனவும், 50 மாணவர்களுக்கு புத்தகப்பைகளும் ரூபா. 270,000 செலவில் வழங்கப்பட்டுள்ளது. கொக்கிளாய்,




உருத்திரபுரம்,கிளிநொச்சி,முரசுமோட்டை,மல்லாவி,மாய வனூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இவை வழங்கப்பட்டுள்ளன. அருட்தந்தைசறத்ஜீவன் நிதியத்தின் இயக்குனர் அருட்தந்தை கி. ஜோ. ஜெயக்குமார் அடிகளார் உருத்திரபுரம் மாணவர்களுக்கான தளபாடங்களை 25-01-2019 அன்றுவழங்கிவைத்தார். இதற்கான நிதிஉதவிகளைதிரு. கிறிஸ்ரிஅருள், பிரான்ஸ், மஞ்சுளாநீக்கிலாப்பிள்ளை, நியூசிலாந்து, சஞ்சீவலொக்குகே, கொழும்புமற்றும் மொன்ரியலை சேர்ந்த அன்பர் ஒருவர் வழங்கியுள்ளனர் . மேலும் 95 மாணவர்களுக்கான மாதாந்த கல்வி உதவியாக ரூபா.1000.00ஒவ்வொருமாணவருக்கும் மாதாந்தம் வழங்கப்பட்டுவருகிறது. மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டிகள் ,யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர் களுக்கான வாழ்வாதாரஉதவிகள்,மற்றும் மருத்துவ உதவிகளும் அருட்தந்தைசறத்ஜீவன் நிதியத்தினால் வழங்கப்பட்டுவருகிறமை குறிப்பிடத்தக்கது.

**வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்பதற்கான வசதிகளை வழங்குதல்**

**கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைசேர்ந்த மாணவர்களுக்கு கல்வி கற்பதற்கான மேசை, கதிரை என்பனவும் புத்தகப்பை என்பனவும் அருட்தந்தை சறத்ஜீவன் நிதியத்தினால் வழங்கப்பட்டுள்ளது.**







# "வரும் ஆனா வராது"

பட்டதாரிகள் வேலைவாய்ப்புக்கு பல பேச்சு வார்த்தை பல போராட்டம், வாக்குறுதிகள் எல்லாம் வடக்குக்கு வரேக்க கதைச்சவையள் எல்லாரும் சாத்திரியள் மாதிரி வடிவேலைப் போலவே அரசியல்வாதிகளும். பேச்சில் சொல்லுகினம் பாத்தியோ தில்லை, வரும் ஆனா வராது எண்டு மரத்தடியில இருந்து விசுவாத்தி கிண்டல் அடித்தார்.

தில்லையோ அரசுக்கு வக்காலத்து வாங்கிறவர் போல வேலை குடுக்க விருப்பம் இருந்தாலும் திறைசேரியில பணம் இல்லாம போச்சாமே. 51நாள் கனவு அரசால எண்டெல்லோ கதைக்கினம் நாடாளுமன்றில....

ஓம்ஓம் அங்க காசில்ல எண்டா மந்திரிமாரை கூட்டி மாலைசூட்டி கும்மாளம் அடிக்க அவசரப்படுகினமே இதுக்கெல்லாம் எதைத் திறக்க போகினம். எல்லாம் பதவி ஆசையில திரியினமே ஒளிய மக்களின்ர மனநிலையை திசைதிருப்பத்தான் அரசியல் யாப்பு பற்றி யாழ் கொல்லைப் புறம் வருகிறவர்கள் சாத்திரம் சொல்லிட்டு போகினம். இந்த செய்தியளை தலையாட்டிப் போட்டு எங்கடையளின்ரை வேலைவாய்ப்புமில்ல, வீட்டுத்திட்டங்களும் இல்லை, ஆசாரி விடை கொடுத்தாலும் இங்க உள்ள பூசாரியளால முல்லைத்தீவுப் பணம் செலவு செய்யாம திரும்பிப் போனது போல திருப்பி அனுப்பின பிறகு போச்சுது போச்சுது பாத்தியளே எண்டு மக்கள் பிரதிநிதியளே சொன்னது போலத் தான் நடக்கும் பாரு எண்ட விசு வாத்தியின் பேச்சுக்கு பதில் கொடுத்தார் அன்னம்மா.

மக்கள் பிரதிநிதிகளுக்கு தங்கட ஊரில நடக்கிறதே என்னெண்டு தெரியாம திரும்பிப் போற வரைக்கும் என்ன பாத்திட்டு இருந்தவையள்? இப்ப கூட வேலைகள் எல்லாம் தென்பகுதி ஆக்களாலையும் பின் கதவாலயும் நிரப்புறதை தெரியாதோ பின்ன நான் கூட வீட்டுத்திட்டத்துக்கு அலைஞ்சு இந்தா அந்தா தாறம் எண்டு கடசியா அடுத்த முறை பாப்பம் எண்டு சொல்ல செல்வாக்குகளுக்கு முன்னுரிமை கொடுப்பினம் சோம்பேறித்தனமான கதிரைகளால எல்லாச் சனமும் அலையுது அண்ணே, முதலில இருக்கிற கதிரை இருந்து புதுசுகளை மாத்தினா ஏதும் நடக்கும் எண்டு எண்ணிறன் ஏன் எண்டா எல்லாம் இப்ப ஒரே குட்டையில ஊறின மட்டையள் போலத்தான் இங்க சோம்பேறியளால இருக்கிறதும் இல்லாம போய் அலையிறம் பார் அண்ணே எண்ட அன்னம்மாக்காவின் ஏக்கத்துக்கு விடையில்லாமல் கவலையோடு கலங்கினார்.




அன்னம்மா கவலைப்படாதை . இது சுனாமி வீட்டுத் திட்டத்தாலயும் தான் இருக்கிறவையளுக்கு தான் கொடுத்ததை ஊர் அறியும் இப்ப கட்டி குடியேறாம கிடக்கிற வீடு ஒவ்வொரு பிரதேசத்திலயும் இருக்கு இவையளுக்கு ஏவல்கேட்டு எங்கடையளும் வாங்க 50ஆயிரம் வேலைவாய்ப்புப் பாருங்களேன். ஐம்பதாயிரம் வீடுகள், சிறைக்கைதி விடுவிப்புக்கள், எல்லாம் கழுதை தேஞ்சு கட்டெறும்பான கதை. எத்தினை காலமா ஏமாத்தினவையளும் அதில குளிர் காயிறவையளும் கொள்ளை, கொலை, கைலஞ்சத்தில, பாதாள உலகத்தோட தொடர்பு பட்டவையள் போல கலங்கித் தவிக்கினம், வண்டியில ஏறி சவாரி செய்யிற இரண்டு மாடுகளும் ஒண்டு ஒருபுறமாக மற்றது மறு புறமாக நம்ம நாட்டில இழுக்கிறதப் பார்த்தா தங்கட பிரச்சினைகளையே தீர்க்க முடியாது மாடுகள் வெருளேக்க, எங்கடையளுக்கு வாசி தானே வேலை செய்தா என்ன செய்யாட்டி என்ன வருவாய்க்கு வழி தேடத்தான் கடத்துகினம் போல ... என தில்லையர் ஆறுதல் கூற.. வரும் ஆனா வராது என கதைச்சு கதைச்சே காலத்தை கடத்திப் போட்டு அடுத்த முறையும் முற்றத்துக்கு வந்து நிற்பினம். இவையளின்ரை குறையை சொல்லியே புதுசுகளும் மீட்பர்கள் போல புதுசா வருவினம் இறக்குமதியளுக்கு தூதுரைக்க இப்பவே எதில பாயுறது எண்டு கலர் சட்டையள் தைக்கத் திரியினம். இதெல்லாம் சுடலைஞானம் பேசிறவையளாத்தான் இருக்கும். வருங் காலத்தில யாவது சிந்திச்சு செயல்பட்டு சீரானவையள இனங் கண்டு கொள்ளுங்கள்.

ஏன் தில்லை அரசமைப்பு பேச்சுக்கள் வெறும் வாய்க்கு அவல் கிடைச்சமாதிரி பேசிப் பேசியே காலத்தை கரைச்சது மட்டுமல்ல 18க்கு மேல் கூடிக் கதைச்சதைக் கூட ஒண்டுமே தெரியாத மாதிரி எதிர்க்கட்சிகள் கூக்குரல் இடுறதிலயும் தமிழர் மீது கொண்ட பற்றுப் பாசத்தை பற்றியோ அவையள் தான் ஆட்சிக்கு ஆப்பு வைச்சு கனவு ஆட்சி நடத்தினவையள் பாரு.

**கிறிஸ்தவர்களுக்கான தவக்காலம் ஆரம்பம் 06.03.2019**

பிறர் மகிழ்வில் நாம் மகிழ ஒறுத்தல் உபவாசங்கள் மூலம் தவக்காலத்தை அர்ப்பண அழைப்பாக ஏற்போம்

# இளையோர் களரி

## இளையோரே உங்கள் சவால்களை சாதனைகளாக்க...

சுருங்கிப்போய்க் கிடக்கும் நவீன உலகில் நாளைய தலைவர்களாக எம்மைப் போன்ற இளைஞர்கள் நசுக்கப்பட்டு, ஒடுங்கிக் கிடக்க தமக்குத் தமக்கு எனப்பல காரணங்களையும் இதனால் வெளி வரமுடியாத துன்பங்களையும் அவற்றால் மீண்டு வர முடியாத விரக்தி வலையிலும் சிக்கித் தவிக்கின்றோம். இத்தகைய குழப்ப நிலையும் சரியான மனநிலை கோபுரத்திலும் ஏறி ஏறி வழுக்கி தன் வாழ்வை வீணடித்தும் தமது பிரச்சனைகளில் இருந்து வெளிவர முடியாதும் இதற்கான சரியான வழி தெரியாதும் தவிக்கும் இளைஞர்கள் இன்று எண்ணிலடங்காதவை.இன்றைய இளைஞர்கள் மனநிலை பற்றி வேண்டும் என்றால் வெறுமனே நாடகம் பேசும் திரைப்படங்களில் வரும் முரடான, துயரமான,காட்சிகளுக்கு அடிமையாகி வெளியில் வரமுடியாது அவஸ்தைப்படுகின்றனர்.அது வெறுமனே நாடகம் என்று தெரிந்தும் அந்தளவுக்கு இன்றய இளைஞர்களின் செயல் மற்றும் சிந்தனை வேகம் குன்றிவிட்டது.மரம் விட்டு மரம் தாவும் குரங்காய் நிலையில்லாத எதிலும் திருப்தியான வெற்றியை காணாது அன்புக்கும் , ஆடம்பரத்துக்கும் தேடி தேடி விரக்தியின் பிடியில் சிக்குண்டு உளல்கின்றனர்.சொற்பகால ஆசை வார்த்தை , பூசி மறைக்கும் காதல் சிறையினால் வலிமை இழந்து போகும் எம்மில் பலர் அதன் தாக்கத்தில் தவிப்பதும் இதற்கு சரியான முடிவு எடுக்க, ஆலோசனை வழங்க அன்பர்கள் இன்றி தற்கொலை செய்வதும் ஏனைய சக மாணவர்களின் கல்வி நிலை போட்டியில் பெறும் தோல்வியானாலும் சில சந்தர்ப்பங்களில் சமூகத்தில் பெரும் அந்தஸ்து இழப்பாலும், குடும்பஸ்தர் இடையே இடம்பெறும் சிறு சிறு பேச்சுவார்த்தைகளுக்கும் அடிமையாகி அந்த பிரச்சினையில் இருந்து வெளிவர முயற்சி செய்யாது தோற்றதாய் விரக்தியின் பிடியிலே மடங்கி விடுகின்றோம்.நண்பர்களே, வெறுமனே தோல்வியோ, துயரமோ எம் வாழ்க்கையில் என்றும் நிலைத்து விடாது என்பதை ஏன் நாம் அடிமனதில் புதைக்க மறுக்கின்றோம்.அற்ப விசயத்துக்காய் எம் வாழ் நாளையே தொலைப்பதை ஏன் புரிய மறுக்கின்றோம .சகோதரர்களே, கால் இன்றியும் , கண் குருடாய் பிறப்பவனும், வாழ்நாள் இடையில் தன் கை, கால் இழக்கும் எம்மை ஒப்ப இழைஞர்களும் சாதிப்பது ஏன் எமது ஊனமுற்ற உடலும ஊனமுற்ற எண்ணங்களுக்கும் முற்றுப்புள்ளி இடவில்லை.வாழ்நாளையே இருளாய் காணும் எம் சக தோழர்களே இனியேனும் தீபம் ஏற்றி ஒளியில் நடைபாதை இட அஞ்சாதீர்கள்.இன்று நாம் மார் தட்டி பேசும் அனைத்து தலைவர்களையும் வென்றவர்களே. ஆதலால் எம் நேர்மையான எண்ணங்களுக்கு உயிர் ஊட்டுவோம். " முயன்றால் முயாதது எதுவுமில்லை " என்பதை நாமும் நிரூபிப்போம்.நித்தம் நித்தம் வரும் துயரதை எம் நிலை குலையாது விட்டொழிப்போம்.எந்தவொரு விடயமும் எமது பழக்கமாக நாமே காரணம்.ஆகவே விரக்தி தரும் விடயங்களை வெற்றியாய் மாற்றிக்காட்டுங்கள்.அவையே உங்கள் வெற்றியான வாழ்க்கைக்கு ஏணி படியாக இருந்து உங்கள் இலட்சியத்தை நோக்கி நடங்கள்.முடங்கியே கிடக்காதீர்கள். நல்ல நண்பர்களான நல்ல நூல்கள் தரும் அற்புதமான வழிகளும் ,

ஈழ்ந்த அமைதி நிலவும் அதிகாலை தியானம் ,மற்றவர் மனம் குளிரும் புன்னகை , எம் மன ஆறுதலுக்கு அனடபான வார்த்தைகள், பெரியவர்களின் அனுபவ அறிவுகள், அவர்கள் மீதான மரியாதை, தீய சிந்தனைகளின் இருந்து விடுதலை அடைய இத்தகைய செயற்பாடுகளை நாளாந்தம் கடைப்பிடியுங்கள்.ஒளிவட்டம் வீசிக்கொண்டு இருக்கும் உங்கள் எதிர்காலம் உங்கள் கண்களுக்கே புலப்படும்.வாழ வேண்டும், சாதிக்க வேண்டும் என்ற ஆவல் அதிகரிக்கும்.எம்முள் புதைந்து கிடைக்கும் ஆற்றல்கள் வெற்றியை நோக்கி ஓடும் விரக்தி, துன்பம், குழப்பமனநிலை உங்களை நெருங்க பயம் கொள்வதை நீங்கள் உணர்வீர்கள். முதலில் உங்களை நீங்கள் சாதனையாளராய் செதுக்கதொடங்குங்கள். பிழைகளையும், தவறுகளையும் தாண்டி நடக்க பழகுங்கள். தசாப்தங்களில் சாதனையாளர் பட்டியலில் உங்கள் பெயரும் பொறிக்கப்படுவது மறுப்பதற்கில்லை. ஆகவே பில்ட்டோட்ஸ் வார்த்தைகளுக்கு வலு சேர்க்கும் வகையில் எமது முயற்சியாய் தொலைந்து போனதாய் நினைத்த வாழ்க்கைக்கும் எண்ணங்களுக்கும் உற்சாகம் பகிர்ந்து அமைதி மனநிலை பேணி வெற்றி கலந்த திருப்தியான வாழ் நாளை அனுபவிக்க தயாராகுவோம்.

Effort brings wealth ; Ideness will bring poverty.

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்

---

**உளவள பணிகளில் 25வது வெள்ளி விழா ஆண்டைக் காணும் "வளர்பிறை" நிறுவனம் அருட்பணி விஜேந்திரன் அடிகளாரின் வழிகாட்டலில் உளவியல் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் மாணவர் தமது ஆற்றல் திறன்களைவெளிப்படுத்தும் ஆக்கங்களால் உங்களைத் தரிசிக்கிறார்கள்.இதுபோன்று இளையோர் தம்திறன்களை வெளிப்படுத்த "யாழ்களரி" களம் தருகிறது.**

### நீ இளை**சாதிக்கப் பிறந்தவனா நீ ...**

ஆனால் உன் மனக் கிடங்குகளோ
விரக்தியில் தவிக்கின்றன
நீ இந்த உலகிற்கு என்தான் செய்தாய்?
நல்வினை விதைத்தாயா இல்லை
தீவினை தான் விதைக்கப் போகிறாயா?
இல்லை ஆன்மீகத்தைத் தான் தேடிச் சென்றாயா?
சமூகத்தை நல்வழிப்படுத்த முனைகின்றாயா?
இல்லை உன்னளவிலான தேடலைத் தான் தேடுகின்றாயா?
அரசியுலில் ஓர் மாற்றத்தைத் தான் விரும்புகின்றாயா?
பௌதீகம், பொருளாதாரம், நிதி இவைகளில் எதைத் தான் நீ
உண்மையாக எதிர்பார்க்கின்றாய்
இவைகள் உனக்கு உண்மையில் எதைத் தான் கற்பிக்கின்றன?
இவற்றையெல்லாம் நினைத்து நீ
வாழ்வில் ஏதாவது மாற்றம் நிகழ்ந்துள்ளதா? என்று ஏங்குவது
எனக்குப் புரிகின்றது
சமூகத்தில் நீ ஒரு இளையவன்
ஆனால் உனக்குள் நீ ஒரு விரக்தி கொண்ட இளையவனே
நீ உனக்குள் மாற்றத்தைக் காணத் துடிப்பதும் தெரிகிறது
சமுதாயத்தில் உண்மையாக நீ நீயாக இருக்கின்றாயா என்று
சிந்தித்துப் பார்
சமூகத்திற்கு இன்று வரை நான் எதைச் செய்திருக்கிறேன்
இனிமேல் எதையெல்லாம் செய்யப்போகிறேன் என்று சில
விநாடி சிந்தி! ஆன்மீகம் தேடல், நிதி, பொருளாதாரம் அரசியல்
பௌதிகம் இவற்றில் நீ எடுக்கும் நவீன தேடலிலும்புரட்சி தரும்
ஆர்வத்தை அதிகரித்துப் பார்
விரக்தியோடு தவிக்கும் உன் மனக்கிடங்கிற்கு இது ஓர்
மீள வழிகாட்டலால் உனக்குள் உறங்கும் நீ
ஒரு மகானாய் மிளிர்வாய்

**- யாழ்மகள் -**

### சவால்கள் உன்வசமா? சாதனைகள் உன்வசமா?

வாலிபம் வாழ்வில் சிலகாலம் என்பர்
வாழ்ந்து பார் முதுமை கூட
வாலிபம் ஆக்கலாம்

வாழ்வில் ஒவ்வொரு நொடியும்
சவால்களின் நிமிடம்
சவால்களை சந்தித்து, சிந்தித்து
பார் சாதனையாக்கலாம்...
சவால்களை சிந்திக்காவிட்டால்
சவால்கள் உன்னை சாக்கடையாக்கிவிடும்
மனதை சிந்திக்கவிடு
மனம் நம்வசப்படுவது தான்
உன் சாதனை
உன்னை நீ நம்பு – அந்த
நம்பிக்கை உன்னை வளர்க்கும்
நல்ல நற்பலனை தேடுவதை விடுத்து
நல்ல புத்தகங்களை நண்பனாக்கு
துன்பங்கள் துரத்தும் போது துவண்டு விடாதே!
துயரமான பக்கங்களில் இருந்து துணிவின்
சிந்தனைகளைக் கற்றுக் கொள்
நேரான கண்ணோட்டங்கள் உன்னை
நேர்வழிப்படுத்தும்
உன்னைச் சுற்றி இருப்பதை பிழை என்காமல், உன்
பிழையைத் திருத்திக் கொள்
உன்நேர்வழி உன்னையும், உன் சமூத்தையும் வாழ
வழிகாட்டும்.
கதை கொண்ட பக்கங்களை
நல் எண்ணங்களால் கழுவியெடு
கண்ணீர் உனதாகாமல்
காலம் உன்வசமாகும்.
கண்ணிமைக்கும் நொடிகூட
கவர்ந்திழுக்கும் உன் வாழ்வின்
வசந்தத்திற்காக..................

**- க.கஸ்தூரி -**

## சிந்தனை துளிகள்

விரக்தியை விடு விடிவு உனக்கு..
வாலிபனே.........
தடையென்று எதுவுமில்லை
உனை நீ வாழ்த்தும் வரை
முடிவென்று ஒன்றுமில்லை
முயற்சி நீ செய்யும் வரை.......

கரை கண்ட மனிதன் இல்லை
பயணம் நீடிக்கும் வரை
சவால் உனக்கு புதிது இல்லை
சாதனை நீ படைக்கும் வரை.........

தோல்வி உன்னை நொருக்கி விடும்
அதை வெற்றியின் வளமெனக் கொள்
உலகம் உன்னை ஒப்பிட்டுப் பேசும்
குறைகளை உணரும் வாய்ப்பாகக் கொள்.........

கல்வி சுமை உனை விரக்தியடைய வைக்கும்
திட்டமிட்டுப் பயிலு காலனையும் வெல்வாய்..
தரிச ஆலிலும் புத்தாக்கம் புனைந்து வீடு
சரித்திரத்தில் முன்மாதிரியாய் இருப்பாய்....

வருமானத்திற்காக அறிவைப் பெருக்காதே
திறனை வள வாய்ப்புக்கள் உன்னைத் தொடரும்
இயந்திரத்தின் வேகம் அதிகம் தான்
அதனையும் வெல்லும் விவேகம் உனக்குள் .........

உன் ஆளுமையை அசைபோட்டுப் பார் – பின்
உலகிற்கு நீ தான் தலைவன்
விரக்தி... விரக்தி என துவண்டு போனாலும்
தன்னம்பிக்கை ஒரு நாள் தூக்கிவிடும்

**- செ.உசாந்தினி - திருக்கோவில்**



# ஜோதிட விஞ்ஞானம்

ஜோதிர்வித்யாரத்னா V.A சிவராசா B.A,BPhil, Dip.in.Edu
56, அம்மன்வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொ.பே.:021 222 8708

## மனையடி சாத்திரம்

நன்மை தரும் அளவுகளில் வீடு கட்டி சீரும் சிறப்புமாக பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழுங்கள்.

06 அடி –நன்மை 08 – செல்வாக்கு உயரும்
10 – பொருட்சேர்க்கை 11 – மகிழ்ச்சி
16 – செல்வச்செழிப்பு 17 – விரோதிகள் பணிவர்
20 – தொழில் விருத்தி, சுகபோகம்
22 – பகைவர் சாசம் 24 – வரவு செலவு சமம்
26 – அபிவிருத்தி 27 – சமூக மதிப்பு
28 – தெய்வ கடாட்சம் 29 – வறுமை ஒழிதல்
31 – இலட்சுமி கடாட்சம், செல்வம் அதிகரித்தல்
32 – பொருட்சேர்க்கை 33 – நிலை உயர்தல்
35 – திருமகள் அருள் 36 – சுக போக வாழ்வு
37 – தொழில் முன்னேற்றம்.
39 – நல்ல வாழ்வு 41 செல்வம் பெருகுதல்
42 – அஷ்டலட்சுமி வாசம் 45 – புத்திரரால் நன்மை
52 – பொருட்சேர்க்கை 56 – குடும்ப விருத்தி
60 – தொழில் அபிவிருத்தி 63 – விரோதிகள் நாசம்/இலட்சுமி கடாட்சம் 64 – பெருநன்மை,
66 – செல்வம், செல்வாக்கு
68 – வெற்றியும் , பொருட்சேர்க்கையும்
70 –புகழ்பரவும் 71 – கௌரவம்
72 – பொன்பெருட்சேர்க்கை 74 – அரசின் ஆதரவு
77 – வாகனயோகம், பொருட்சேர்க்கை
79 – கால் நடைகள் பெருகுதல் 80 – இலட்சுமி கடாட்சம்.
84 – நன்மைகள் விளைதல்
85 – சுகபோகமும்/அரசின் செல்லப்பிள்ளை
87 – பலவித வாகன் யோகம்
88 – அடிக்கடிப்புனித பயணம்
89 – உறவினர், பொருட்சேர்க்கை
90 – செல்வமும் செல்வாக்கும்
91 – அறிவுச்சுடர் பிரகாசித்தல் 92 – பெருமையும் புகழும்
95 – பொருட்சேர்க்கை, 97 – வாணிப வளர்ச்சி
98 – சர்வதேச புகழ், 99 – அரச ஆதரவு
100 – தெய்வத்திருவருள் 101 – நன்மைகள் பெருகுதல்,
106 – கல்வி செல்வ அபிவிருத்தி
108 – தெய்வ அனுக்கிரகம் 109 – நன்மைகள் உண்டாதல்,
110 – இலக்குமியின் கடாட்சம் 111 – சுபகாரிய நிகழ்வுகள்
112 – இழந்தவை கிடைத்தல்,
113 – பொருட்சேர்க்கையும் நன்மையும்
116 – உள உடல் அபிவிருத்தி, 117 – கால்நடைப்பெருக்கம்
119 – புகழ், பொருள், கௌரவ அதிகரிப்பு

★ இயற்கையை ஒத்து இன்புற்று வாழும் மனையடி சோதிடக்கலையே வாஸ்து மனை அமைவது போல் மக்கள் அமையார்
★ நமக்கு கிடைத்த இல்லத்தை வாஸ்து எனும் அரிய கலையை பயன்படுத்தி வாழ்வில் எல்லா நலமும் பெற்று இன்புற்று வாழ முன்வாருங்கள் வாஸ்து முறை சகல இனத்தாருக்கும் உரியது? மூடப் பழக்க வழக்கங்களோ அல்ல.



★ வீட்டின் மேற்குத்திசையைவிட கிழக்குத்திசையில் காலி இடம் அதிகமாக இருத்தல் வேண்டும்.
★ இறந்தவர்களின் படங்களை சாமி அறையில் கடவுள் படங்களோடு சேர்த்துவைக்கக்கூடாது.
★ மிருகங்களின் பதப்படுத்தப்பட்ட தலைகளை வீட்டினுள் அழகுக்காக வைக்கக்கூடாது.
★ வீட்டுக்கு தென்மேற்குப் பகுதியில் குழியோ கிணறோ இருக்கக்கூடாது.
★ வீட்டின் தென்மேற்கு அறையின் தளம் தாழ்ந்திருக்கலாகாது.
★ தென்மேற்குத்திசையில் தலைவாயில் அல்லது நுழைவாயில் (கேற்) இருத்தலாகாது.
★ தென்கிழக்குப்பகுதி நிலத்தடியில் தொட்டியோ கிணறோ அமைத்தலாகாது
★ சாமி அறையின் நீளத்தை விட அடுத்த அறைகளின் நீளம் குறைாக இருக்கவேண்டும்.
★ சாமி அறையின் அகலத்தை விட கோலின் அளவு குறைவாக இருத்தல் வேண்டும்.
★ குடும்பத்தலைவர் அதன்மேற்கு அறையை படுக்கைத்தளமாக பாவித்தல் வேண்டும
★ வடக்கு வாயு பகுதியில் வெளியே போகும் கதவு வைக்கக்கூடாது.
★ தென்மேற்கு பகுதியில் தெருத்தாக்கம் வரவே கூடாது.

### வீடு கட்டுதல் /குடிபுகுதல்

தமிழ்
சித்திரை – வடக்கு/தெற்கு – வைகாசி – வடக்கு/தெற்கு
ஆடி – கிழக்கு/மேற்கு – ஆவணி – கிழக்கு/மேற்கு
ஐப்பசி – வடக்கு/தெற்கு – கார்த்திகை– வடக்கு தெற்கு
தை –கிழக்கு/மேற்கு – மாசி – கிழக்கு/மேற்கு
பங்குனி – கிழக்கு/மேற்கு

### வீடு கட்டும் மாதங்கள்

தமிழ்
தை – மேற்கு
மாசி –மேற்கு/கிழக்கு
பங்குனி – கட்டலாகாது
சித்திரை – வடக்கு
வைகாசி – வடக்கு/தெற்கு
ஆனி – கட்டலாகாது
ஆடி – கிழக்கு
ஆவணி – கிழக்கு/மேற்கு
புரட்டாதி – கட்டலாகாது
ஐப்பசி – தெற்கு
கார்திகை – தெற்கு/வடக்கு
மார்கழி – கட்டலாகாது

### கிணறு அமைக்கும் திசைகள்

வடக்கு வாயில் – கும்பம் – கிழக்கு – இடபம்
தெற்கு – சிங்கம் – மேற்கு – விருச்சிகம்

### கிணறு இருக்கும் திசைகள்

| | |
|---|---|
| கிழக்கு – செல்வம் | தென்கிழக்கு – புத்திரநாசம் |
| தெற்கு – மரணம் | தென்மேற்கு – களத்திரநாசம் |
| மேற்கு – சம்பத் | வடமேற்கு – சத்துருநாசம் |
| வடக்கு – ஆரோக்கியம் | வடகிழக்கு – சந்தோசம் |
| நடுவில் – பொருளழிவு | |

### மனைவாயில் பொருத்தம்

| | |
|---|---|
| மேடம் – மேற்கு/வடக்கு | இடபம் – கிழக்கு/வடக்கு |
| மிதுனம் –கிழக்கு/வடக்கு | கடகம் –கிழக்கு/வடக்கு |
| சிங்கம் –கிழக்கு/தெற்கு | கன்னி – கிழக்கு/தெற்கு |
| துலாம் – கிழக்கு/தெற்கு | விருச்சிகம் – தெற்கு/மேற்கு |
| தனு – தெற்கு/மேற்கு | மகரம் – தெற்கு/மேற்கு |
| கும்பம் – மேற்கு/வடக்கு | மீனம் – மேற்கு/வடக்கு |

### வீட்டுத்தோட்டத்தில் வளர்க்க கூடிய மரங்கள்

வேம்பு, தென்னை, வாழை, மாமரம், பலாமரம், செங்கரும்பு, நாவல்மரம்,கமுகு, கொன்றை, எழுமிச்சை, நாரத்தை, மாதுளை, சிவகரந்தை
துளசி, மல்லிகை, முல்லை

### வளர்க்க கூடாத தாவரங்கள்

பிரம்பதண்டு, எருக்கு, கற்றாளை, பேய்பீர்க்கு, பேய்சுரக்காய், அவரை, தூதுவளை, அகத்தி, முருங்கை, பனை, பருத்தி, வெட்பாலை, வில்வம்,நொச்சி, மகிழ், அரசமரம், ஆலமரம், நெல்லி, புலியமரம், இவைகளின்றி நறுமணம் கவரும் பூச்செடி, கொடிவகைகளையும் வளர்க்கலாம்

# தமிழ் தலைமைகளின் ஒற்றுமைக்கு தடை என்ன? அதற்கு நீங்கள் கூறும் விடை என்ன?

நாட்டுப்பிரச்சனை தீர விடாமல் தொடர விட்டாற்தான் தமது பதவிகளைத் தக்க வைக்க முடியும்.அதனால் மக்களை திசைதிருப்ப தம்மிடையே பிரச்சினைகளைப் பெருப்பிக்கின்றார்கள்.மக்களை மையப்படுத்தி அவர்களை வாழ வைக்க சுயநலம் மறந்து பொதுநோக்கிற்காக ஒன்றுபட்டுழைக்க வேண்டும்.ஆனால் இது நடைமுறைச் சாத்தியமல்ல.

**- பி.மேரி பெனிக்னா -ஆசிரியர்**

தலைமைகள் மேல் இடங்களை கவனத்தில் கொள்ளுதல்
முன்னைய காலங்களில் தலைமை தரையில் இறங்கி வேலை செய்தனர்
தற்போதைய தலைமை முதல் தமக்கு தரம் பார்த்தலும் தரமானதை தனதாக்கி கொள்ளலும்
தலைமைகள் கூட சட்டங்களை உட்பூசலுடன் லஞ்சம் பெறுதல்
தலைமைகள் தனக்கான விட்டுக்கொடுப்பின்மை.
தலைமையில் இருப்பவர்கள் கீழ்மட்டத்தில் இறங்கி வேலை செய்தல்
தலைமையில் இருப்பவர்கள் இலாப நோக்கம் இல்லாதவராதல், விட்டுக்கொடுப்பு இருத்தல்.

**விக்ரா லலிதா**

தலைவர்களின் சனத்திரமற்ற நடவடிக்கைகள்
உண்மைத் தன்மையற்ற நிலைகள்
துணிவற்ற நிலைமைகள்
தியாகமற்ற உணர்வுகள், கணத்தில் நிர்கதி நிலை.

முதலாவது தடை சுயநலம்.தமது நலத்தைத் துறந்து மக்கள் நலன் கருதும் தலைவர்கள் இன்று இல்லை.அமரர் செல்வநாயகம் போன்ற தலைவர்கள் உருவாக



வேண்டும்.சமூக நோக்கு நலன் கொண்டவர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.வாக்கு உரியவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் சிறந்த தலைவர்களைத் தெரிவது பொதுமக்கள் கடமையாகும்.

**முன்னாள் அதிபர் திருமதி P.F சின்னத்துரை**

சுயநலம், போட்டி, பொறாமை, பிடிவாதபோக்கு போன்றவை தமிழ்தலைமுறைகளின் தடைகளாக அமைகின்றன.எனவே பொருத்தமான பொறுப்பு மிக்க சமூக உருவாக்கலுக்கு விழித்திட அனைவரும் விழிப்படைய வேண்டும்.மனித உறக்கங்களுக்கு எல்லோரும் நல்லோராய் வாழ வேண்டும்.முற்போக்குச் சிந்தனைகள் விதைக்கப்பட வேண்டும்.எளியோரின் விழிநீர் துடைக்க இழையோர் முன்வரவேண்டும்.

தலைமைகள் உருவாக்கபட வேண்டும்.ம்க்களை நேசிக்கும் கொள்கைபற்றுள்ளவர்களாக இருக்க வேண்டும்.தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டு வாழ வேண்டும்.சுயநலமிக்கவர்களாக இருப்பது குடும்பத்துக்காக வாழ முற்பட்டு குடும்ப வாரிசு பற்றி சிந்தித்தல்.வெளிநாட்டு சக்திகளின் விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாகி செயற்பட்டல்.
தலைவர்கள் மக்களால் உருவாக்கப்பட வேண்டும்.

**அ.செல்வநாயகம்**


இலங்காபுரியின் தலைமண்ணில் தடம் பதித்த சமத்துவச் சஞ்சரிப்பு ..........

# சமத்துவத்தின்சரித்திரப் பயணம்

- அனுபவப் பகிர்வு-

✍ பாத்திமா சகீனா
காலிமாவட்ட இணைப்பாளர் இலங்கை பல்சமயகருத்தாடல் நிலையம்

இரு நாட்கள் மீண்டுமொரு முறை தாய்/சேயாய் மாறிட்ட அனுபவங்களை மீட்டிப் பார்ப்பதுடன் அவற்றைப் பகிர்ந்து கொள்ளக் கிடைத்தமையை எண்ணி அகம் குளிர்கிறேன். கடந்த 2019 ஜனவரி மாதம் 26ம் திகதி காலி கரிடாஸ் நிறுவனத்தின் பூரண உதவியுடன் இலங்காபுரியின் தென்கரையையும், தலைமண்ணையும் சமத்துவத்தின் தோனி கொண்டு இணைத்திடும் சரித்திரப் பயணம் ஆரம்பமானது. உள்ளங்களை இரண்டறக் கலந்து சமாதானத்தின் ஜோதியை எரிய வைப்பதையே முழு நோக்காகக் கொண்ட இப்பயணத்தில் இணைந்து கொள்ளக் கிடைத்தமையை மாபெரும் பாக்கியமாக நினைக்கிறேன். தொடர் நாட்கள் மூன்றில் கடந்த ஒவ்வொரு நொடியும் புதுப்புது அனுபவங்களையும் ரசனை நினைவுகளையும் எம் உள்ளங்கள் அடுக்கிக் கொண்டன என்பதில் துளியளவும் ஐயமில்லை. இவ்விடம் நான் அவற்றின் சிலதை பகிர்ந்து கொள்ள பெற்ற வாய்ப்பைப் பாக்கியமாக எண்ணுகின்றேன். காலி மாவட்டத்தில் வாழ்கின்ற நான்கின மத மக்களில் 4 பேரை ஒன்றிணைந்த பயணமே யாழ் மண்ணுக்கான சமத்துவப் பயணம். சமாதானத்தின் ஒலியை மனித மனங்களில் ஏற்றிட ஒன்றிணைந்த குழுவின் வருகையை தலைமண்ணின் சுவாசத் துளிகள் எதிர்பார்த்திருப்பதை அறிந்திடாத எம்மவர் உள்ளங்களில் ஆயிரம் கேள்விகள் பயமும், தடுமாற்றமும் கலந்ததாக இருண்ட பொழுதுகள் விடிந்தன பேரூந்தின் சக்கரச் சுழற்சியில்.




*யாழ்.மாவட்டத்துக்கான எனது முதற் பயணம். ஒவ்வொரு நகர்வும் புது அனுபவம்*

இதுவரை வேற்றுமத ஸ்தலங்களை எட்ட நின்று பார்த்த எனக்கு யாழ் நல்லூர்க் ே காயிலுக்குள் சென்று பார்வையிடக் கிடைத்த வாய்ப்பு முதல் அனுபவமானது. யாழ். கோட்டைக்குத் தொடர்ந்த



பயணத்தின் தொடரில் மிக அழகான ஓர் அனுபவத்தை ஏந்தியிருந்தது அல்லைப்பிட்டிக் கிராமம். பொங்கல் திருவிழா கடந்து சென்ற போதிலும் அவ்வூர் உறவுகளுடன் இணைந்து மீண்டுமொரு பொங்கலின் அழகான அனுபவங்களை எம்மகத்தே தந்தது. யாரோ சமைத்த பொங்கலை ரசித்து உண்டு பழகிப் போன நாம் அல்லைப்பிட்டி மக்களுடன் பொங்கல் பொங்க வைக்கும் சந்தர்ப்பம் கிட்டியது. அளப்பரிய சந்தோசம்.

*எந்த வித்தியாசமுமின்றி உறவோடு உறவாய் ஒன்றிப் போன நிமிடங்கள் ...*

இரவுகளுக்கு உறவுகள் அடைக்கலம் தந்தனர். அதில் எவ்வித தயக்கமும் தெரியவில்லை. வித்தியாசமான ஒரு அனுபவமாக மாறிப் போனது. உயிர் வாழும் வரை மீட்டிப் பார்க்கும் உன்னத உறவை நாம் பெற்றோம்.

அல்லைப்பிட்டி மற்றும் வெண்புரவி வீடுகளின் ஒவ்வொரு உயிரும் எம் சொந்தங்களாக மாறினர். கழிந்த ஒவ்வொரு நொடியும் உணர்வுபூர்வமாக மீட்டிப் பார்க்கும் பொழுதுகளாயின. ஒவ்வொரு தாயின் தாயன்பும் ஒவ்வொரு தந்தையின் பாசமொழியும், ஒவ்வொரு சோதர சொந்தமும், உடன் பிறப்புக்களாயும் தென்னவர் உள்ளங்களில் காலத்துக்கும் அழியாத தடம் பதித்தனர். இரட்டை நாட்களில் அவர்களின் கருணைக்குள் புதைந்த சேவகத்துக்கு நன்றி சொல்ல நாம் கடமைப்பட்டவர்கள். அவர்களின் உணர்வுகளையும் எண்ணங்களையும் அனுபவ ரீதியாகப் பெற்றுக் கொள்ள மிக அருமையான சந்தர்ப்பம் ஒன்றை கரிடாஸ் தேசிய நிறுவனம் எமக்குப் பெற்றுத் தந்தது. சாட் [Chati] என்ற இஸ்லாமிய கிராமத்தில் அம் மக்களை சந்திதத்ததும் அவர்களுடன் இணைந்து செய்த கடற்கரை சிரமதானமும் பலரின் உணர்வுகளையும் அறிய எமக்கு மிகப் பெரிய வாய்ப்பானது. நயினாதீவுப் பயணம், கோயில் அன்னதானம் இவையெல்லாம் எமக்கு மிகப்பெரிய அனுபவங்கள் பலதால் அகமகிழ வைத்தன. மேலும் மீண்டுமொரு பயணத்தின் ஆசையையும், எதிர்பார்ப்பையும் வலுப்படுத்தின. சாதி, மத, பேதம் மறந்து வெண்புரவி உறவுகள் ஏற்பாடு செய்த கலைவிழாவில் எமை மறந்து நாம் ஒன்றிப் போனோம். சந்தோசத்திற்கு சாதி, மதம் தடையல்ல என்பதற்கு அவ்வைபவம் மீண்டுமொரு சாட்சியாக் மாறியது. காலத்தின் கொடுங்கோலாக மாறி வருகின்ற வதந்திகளின் ராஜாங்கத்தில் தலைதூக்குகின்ற இனப்பிரச்சினையைக் கட்டவிழ்த்து குளிர் காயத் துடிக்கும் விஷமிகளுக்கு மத்தியில் இனம்,மதம், மொழி, சாதி, குலம் இவை யாவற்றையும் கடந்து ஒன்றாக ஒற்றுமையாக கைகோர்த்த எம் தென்கரை உறவுகளை எவ்வித சலனமும் இன்றி எவ்வித தயக்கமும் இன்றி முகமலர்வுடனும், உள்ளன்புடனும் ஏற்று அரவணைத்து ஆதரித்து உதவிகள், உபசாரங்கள், கவனிப்புக்களை ஒரு சிறு குறையும் இன்றி செய்திட்ட உறவுகளைக் கண்கூடாகக் கண்டு அனுபவித்த பின்னர் எம் உள்ளங்கள் சந்தோசத்தையும், ஒற்றுமையையும் எந்தளவு நேசிக்கின்றன என்பது கண்கூடு.பதினைந்து வருடங்களுக்கு முன் சமாதான நோக்கில் தெற்கின் ஒரு குழு யாழ்ப்பாணம் வந்து போனதாக கண்ணியத்துக்குரிய அருட்தந்தை சொல்ல நாம் கேள்விப்பட்டோம். பதினைந்து வருடங்கள் கடந்த நிலையிலும் தென்கரை மற்றும் தலைமண்ணில் உயிர் கொண்ட ஒவ்வொரு உயிர்த்துளியும் சமாதானத்தின் வாசனையை நுகரத் துடிக்கின்றன. சமத்துவத்தின் கரங்களை ஒற்றுமையாகப் பற்றிடத் தயாராக இருக்கின்றன என்பது கண்கூடு. அது நம் காலத்தின் தேவையென்றால் மிகையில்லை. பௌத்த மக்கள் அதிகமாக கலந்து கொண்டதால் மொழி தொடர்பாக மிகப் பெரிய பயம் எம்மில் காணப்பட்டாலும் இதுவெல்லாம் ஒரு பிரச்சினையே அல்ல என்று எம் காலி மற்றும் யாழ் உறவுகள் ஒரு குடும்பமான அனுபவம் உண்மையில் ரசிக்கத் தக்கது. ஒற்றுமையில் வாசத்தில் தவழும் சந்தோசத்துக்கு எதுவும் தடையல்ல என்பதை சாட்சி சொல்லிப் போனது. இவ்வாறு நாம் கழித்த இரட்டை நாட்களின் அழகிய நினைவுகளை அடுக்குகளாகப் பகிர்வதில் அளப்பரிய சந்தோசமேயன்றி வேறில்லை. தலைமண்ணில் எமக்கான வரவேற்பும் ஆதரவும் அரவணைப்பும் உண்மையில் நாமும் எமது குறிக்கோளும் கண்ட மாபெரும் வெற்றி என நான் கருதிய போதிலும் மனித நேயம் மனங்களில் குடிகொண்ட நாம் காலம் முழுதும் அவர்களுக்கான நன்றிகளைச் சுமந்திருப்போம்.......

**வாழும் வரை வாழும் நம் சொந்தம்**
**இவ்வறான ஒரு பெறுமதியான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்த காலி கரியடாஸ் ஸெட்கோல் (SADGALLE) நிறுவனத்திற்கும். யாழ்.மண்ணின் கியூடெக் (HUDEC) நிறுவனத்திற்கும் அந்நிறுவனங்களின் பணிப்பாளர்களான அருட்தந்தைமாருக்கும். ஊழியர்களுக்கும் சகல விதத்திலும் உதவி ஒத்தாசைகள் செய்திட்ட சகலருக்கும் எமது பணிவான நன்றிகள்.**

யாழ் களரி
Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/Viber: 077 6510375
பிரதம ஆசிரியர்: ஜோர்ச் ஜெஸ்ரின் |
பொறுப்பாசிரியர்கள்: வே.சஞ்சீவதனுசன் | செ.யோசப்பாலா
வெளியீடு மற்றும் தொடர்பு முகவரி: ராகஸ்வரம் கலைமன்றம் |
இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்
28/1 A.V வீதி, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

# வடக்கின்
## பொருளாதார அபிவிருத்தி

அபிவிருத்தி நடவடிக்கைகள் வடக்கில் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யவில்லை காரணம். போருக்குப் பின்னரான அபிவிருத்தி உட்கட்டமைப்பினை உருவாக்குதல். கொடுகடன் விரிவாக்கம். தனியார்துறை முதலீடுகள் என்பன பொருளாதார வளர்ச்சிக்குத் தூண்டவில்லை. இதற்குக் காரணம் வடக்கில் சிறியளவிலான உற்பத்தியாளர்களின் பொருளாதாரத் தளங்களில் முதலீடு செய்தல் புறக்கணிக்கப்பட்டது . இத்துடன் பிராந்தியத்தில் நிலவுகின்ற இயலுமை மற்றும் திறன்களை வளர்ப்பதில் தோல்வியடைந்தமை பலவீனமடைந்து இவை தொலை நோக்கும் ஒருங்கிணைப்புமில்லாமல் திட்ட அடிப்படையிலான மனப்பாங்குடன் அமுல்படுத்தப்பட்டமை.

விவசாயம். கைத்தொழில். சேவைகள் உட்பட்டு வடக்கிற்கான முன்மொழியப்பட்ட அபிவிருத்தி மாதிரியின் பண்புகளை நோக்கினால்.

உற்பத்தித் திறன் மேம்பாட்டிற்கான சிறயளவான உற்பத்தியாளர்கள் மற்றும் கைத்தொழில்களில் பொருத்தமான விதத்தில் மூலதனத்தை முதலிடுதல் அதிகளவான மக்கள் பாதுகாப்பானதும். உறுதியானதும். கிரமமான வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதான ஊழியச்செறிவு மிக்க உற்பத்தி.

நிலம் மற்றும் இயற்கை வளங்களைப் பரந்த அளவில் பயன்படுத்துகின்ற முக்கியமாக விவசாயம் முன்னுரிமைப்படும் விருத்தி. உயர் பெறுமதியான ஏற்றுமதி உள்ளிட்ட சந்தைக்கு ஆதரவளிக்கும் நடுத்தர கால முயற்சிகள்.பிராந்திய மற்றும் பாலின வேறுபாடுகள் குறைக்கப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் மாகாணம் முழுவதும் வேறுபட்ட மக்கள் குழுக்களிடையேயும் பகிர்ந்தளிப்புக்களை மேற்கொள்ளுதல் மேற்படி பண்புகளாகும்.

உள்ளூர் உற்பதிதிகளைப் பயன்படுத்தி பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும்.

விவசாயம்: தண்ணீர் பற்றாக்குறை நிலவுகின்றது. வீட்டுத்துறையின் மீண்டெழுகைக்கும். பாதுகாப்பிற்குமான விவசாயத்தை இலாபகரமான நீடித்து நிலைத்திருக்கக் கூடிய விவசாய உற்பத்தியினை அதிகரிக்கப்பட வேண்டும்.

கைத்தொழில்: பெறுமதி சேர்க்கைக்கான விவசாய உற்பத்தி. கைவினைப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களின் விரிவாக்கம் நவீன மென்பொதியிடல் துறையினை வலுச்செய்ய வேண்டும்.

சேவைகள்: நிதியியல் பணிகளில் மீள்கட்டமைப்பு உருவாக்கப்பட்டு பொதுப்போக்குவரத்துப் பணிகள் சிறுவர் மற்றும் முதியோர் பராமரிப்பு மற்றும் சுகாதாரம் தகவல் தெரிவிப்பு கூட்டம் மற்றும் சுற்றுலாத்துறை சேவைகள் விரிவாக்கப்படவேண்டும்.

இதற்கு தொழில்துறை விரிவாக்கம் இயற்கை வள முகாமைத்துவம் அபிவிருத்தி நிதியிடல் ஆராட்சி மற்றும் கொள்கைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

வடக்கைப் பொறுத்தவரையில் சாதிக்கப்பிறந்த சாதனை மன்னர்களாக இலைமறைகாய்களாகப் பலர் இருக்கிறார்கள் இவர்களது பலவீனம் சந்தை வாய்ப்பை ஏற்படுத்த முடியாமை தான்.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களை உருவாக்கிப் பாடுபட்டுப் பின்னர் அதையே கொண்டு திரிந்து சந்தைப்படுத்தி அல்லல் படுகிறார்கள். இதில் லாபமீட்டியவர்கள் நிற்க நட்டப்படும் பெரும்பகுதியினர் தமது முயற்சிகளை கைவிட்டு இருந்த இடம் தெரியாமல் காணாமல்போகின்றார்கள். வடக்கின் உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. பெரும்பாலும் வளங்கள் தான் சுரண்டப்படுகிறது. இந்த நிலை மாற எம்மிடம் என்ன திட்டம் இருக்கிறது?

# விடுதலைக்குப் போராடும் ஈழத்துத் தமிழ்மக்கள்

7

## உரிமை கேட்கும் உரிமை அற்ற தமிழர்கள் -10

பரமபுத்திரன்

மக்கள் ஒழுங்கமைப்பு, நிர்வாக சீராக்கம், தப்பு செய்வோருக்கான தண்டனைகள் என்பன விரிவடைந்து, காவல் நிலையங்கள், இராணுவம் என்பன தாக்குதலுக்கு உள்ளாக ஆரம்பித்தது. ஆனால் விடுதலை அமைப்புகளை பொறுத்தவரை மறைந்திருந்து தாக்குதல், அல்லது தாக்கிவிட்டு மறைதல் என்ற சித்தாந்தத்திற்கு அமைய இராணுவத்தை தாக்கிவிட்டு சென்று விடுவார்கள். அதேவேளை தாக்குதலுக்கு உள்ளான இராணுவம், அல்லது அதன்பின் வரும் இராணுவம் மக்களை தாக்கும். இது படிப்படியாக மக்களிடம் ஆதரவு,எதிர்ப்பு, ஆதரவு கலந்த எதிர்ப்பு என்று பலவகையான மாற்றங்களை ஏற்படுத்த தொடங்கியது. இருந்தாலும் மக்கள் விடுதலையை விரும்பினார்கள். மக்கள் மத்தியில் பிரபலமான முதலாவது தாக்குதல் விடுதலைப்புலிகளால் ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்து மூன்று யூலை இருபத்து மூன்று அன்று திருநெல்வேலியில் இராணுவத்தின் மீது நிகழ்த்தப்பட்டது. மறுநாள் காலை மாதகல் முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவம் பண்டத்தரிப்பு சந்தை அடங்கலாக உள்ள பகுதிக்குள் சரமாரியாக சுட்டுத்தள்ளியது. அங்கிருந்து புறப்பட்டு சண்டிலிப்பாய் சந்தியில் சிற்றூந்து ஒன்றில் வந்தவர்களை சுட்டுவிட்டு, பின் மானிப்பாய் இப்படி பல இடங்களில் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்து மக்களை பயமுறுத்தியது. துப்பாக்கிகளுடன் இல்லாத, துப்பாக்கி சத்தமே கேட்காத சாதாரண மக்கள் தாக்கப்பட்டனர். பயந்தனர். சாவினைகண்டு அஞ்சினர். அன்றைய தினம் நானும், இன்னும் ஒருவரும் இளவாலை சந்தியில் பயணம் போவதற்கு வாகனத்துக்காக நின்றிருந்தோம். ஒரு சிற்றூந்து வந்தது. அதனை மறித்தும் நிற்கவில்லை. அவர் வாழைக்குலை ஒன்றுடன் வந்தவர் பண்டத்தரிப்பு சந்தையில் விற்பதற்கு, நான் பிரத்தியேக வகுப்பிற்காக யாழ்ப்பாணம் போவதற்கு. அதன் எந்த வாகனமும் வரவில்லை. பின்புதான் தெரியும் அது இராணுவத்தினர் பயணம் செய்த சிற்றூந்து என்பதும், துப்பாக்கிவேட்டுகளை தீர்த்ததும், மக்கள் இறந்ததும், திண்ணைவேலியில் நடந்த தாக்குதலும். ஆனாலும் நாங்கள் நின்ற இடத்தில் இராணுவம் எதுவும் செய்யாமல் சென்றுவிட்டது. அன்றைய காலகட்டத்தில் மக்களின் வாழ்க்கை நிலை இதுதான். தங்களின் அன்றாட வாழ்வியலுக்காக செயற்படுவதுதான் முக்கிய நோக்கு. நாட்டுநிலையை அவதானிப்பதுஇ செய்தி கேட்பது, அரசியல் தொடர்பாக சிந்திப்பது என்பவை எல்லாம் அதன்பிறகுதான். இது மட்டுமல்ல இந்தத் தாக்குதல்தான் ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்து மூன்று இனக்கலவரத்துக்கு காரணமானது என்றும் ஒரு பேச்சுண்டு.

இதன் பின்பு காவல்துறை மீதும், இராணுவம் மீதும் தாக்குதல்கள் விடுதலை புலிகளால் மட்டுமல்ல ஏனைய விடுதலை அமைப்புகளாலும் நடத்தப்பட்டன. இவற்றை எண்பத்து மூன்றின் பின் எண்பத்து ஏழுக்கு முன் என்று சொல்லலாம். இத்தாக்குதல்களில் சில தாக்குதல்கள் மிகவும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டிருந்தன. குறிப்பாக தமிழீழ விடுதலை இயக்கம் (வுநுடுழு) நடாத்திய சாவகச்சேரி காவல் நிலை தாக்குதல், கொக்காவில் மாங்குளம் தாக்குதல்கள் மிகவும் திட்டமிடப்பட்டு வேறுபட்ட விதத்தில் நடத்தப்பட்டிருந்தன. அதாவது சாவகச்சேரி காவல் நிலையம் தாக்கப்பட்ட போது அதனை பாதுகாக்க ஓடிவந்த நாவற்குழி இராணுவம், மீதும் வழி மறிப்பு தாக்குதல் நடந்தது. தாக்குதல் நடத்தப்படும் இடத்துக்கு விரைந்து ஓடிவந்து ஊர்மனைக்குள் இருக்கும் மக்களை அடித்து நொருக்கும் இராணுவம் பயந்து ஓடிய முதல் தாக்குதலாக இதனை குறிப்பிடலாம். இந்த வழிமறிப்பு தாக்குதல் ஒரு தாக்குதல் நடந்தால் அந்த தாக்குதல் நடைபெறும் இடத்துக்கு பாதுகாப்பு கொடுக்கவோ அல்லது எதிர் தாக்குதல் செய்யவோ இராணுவம் செல்ல முடியாத நிலையை தோற்றுவித்தது. இது ஒருவகையில் இராணுவத்தின் செயல்பாட்டு முடக்கத்தை கொடுத்த அதேவேளை மக்களும் துணிந்து நடமாடும் நிலையை தோற்றுவித்தது.

அடுத்து கிளிநொச்சி காவல் நிலையம் மீதான ஒரு தாக்குதலை குறிப்பிடலாம். அந்த தாக்குதல் தமிழீழ இராணுவம் எனப்பட்ட (T.E.A) அமைப்பினால் நிகழ்த்தப்பட்டது. இரவு வேளையில் ஒரு வாகனம் வந்து காவல் நிலையத்தின் முன் நின்றது. அதன் மீது காவல் நிலையத்தவர்கள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர். அத்துப்பாக்கி குண்டுகள் வந்து நின்ற வாகனத்தை தாக்கியவுடன் அதிலிருந்து புறப்பட்டு வந்த வாயு எரிந்து, துப்பாக்கி பிரயோகம் செய்தவர்களையும், காவல் நிலையத்தின் உள்ளே இருந்தவர்களையும், காவல் நிலையத்தையும் தாக்க ஆரம்பித்தது. மிகக்குறுகிய நேரத்துள் பாரிய மாற்றம் கொடுத்த தாக்குதல் இது. புதிய முறையிலான தாக்குதல். அங்குள்ளவர்கள் எல்லோரும் பயந்த தாக்குதல். அந்த தாக்குதலின் போது உள்ளே இருந்த ஒரு காவல்துறை சாரதி பின்னர் ஒருமுறை சொன்னார் " அதென்ன இவங்கள் சுட, மரம் எரியுது, சுட்டவரின்ரை தலைமயிர் எரியுது, உடுப்பு எரியுது, எல்லாஸ்ரயும் நடுங்க வைச்சிட்டப்பா, பாத்திருப்பீங்கள் பாதிப்பேருக்கு மீசையும் போச்சு" இப்படியான மக்களுக்கு எதுவும் செய்ய இராணுவம் முனையாத தாக்குதல்களும் நடந்தன.

( தொடரும்)

# குடும்ப சீர்கேடும் உளப் பாதிப்பும்



தாய், தந்தை மற்றும் அவர்களது பிள்ளைகள் எனும் அங்கத்தவர்களைக் கொண்டது குடும்பம் என்றும் பல குடும்பங்களின் இணைவு சமூகம் என்றும் கூறலாம். தனி மனிதனிடமோ, குடும்பத்திலோ அல்லது சமூகத்திலோ ஏற்படுகின்ற நடத்தை பிறழ்வு சீர்கேடு எனலாம்.

இன்றைய உலகில் தனி மனித நடத்தையை மிகவும் பாதிப்பது குடும்பச் சீர்கேடுகள் ஆகும்.

இக்குடும்ப சீர்கேடானது ஒரு குடும்ப அங்கத்தவர் யாராலும் ஏற்படலாம். இச் சீர்கேடானது தந்தை மூலமோ, தாய் மூலமோ அல்லது பிள்ளைகள் மூலமோ இடம்பெறலாம்.

இக்குடும்பச் சீர்கேடானது தந்தையின் குடிப்பழக்கத்தாலோ ஏனைய தவறான பழக்கத்தாலோ அல்லது தாயின் தவறான பழக்கத்தாலோ அல்லது தாயின் நடத்தைப் பிறழ்வுகளாலோ அல்லது பிள்ளைகளின் தவறான நடத்தைகள் மற்றும் தாய், தந்தை சொற்படி நடவாமை போன்ற காரணிகளால் குடும் சீர்கேடுகள் ஏற்படுகின்றன.

இவ்வாறான குடும்ப சீர்கேடுகளால் குடும்ப உறுப்பினர்கள் உளரீதியான பெரிதும் பாதிக்கப்படுகின்றார் கள். இக்குடும்ப சீர்கேட்டார் குடும்பத்துக்கான சமூக அந்தஸ்து பாதிக்கப்படுகின்றது. குடும்ப சீர்கேடு காரணமாக பறிக்கப்படுகின்றது. குடும்ப சீர்கேடு காரணமாக ஏனைய சமூக அங்கத்தவர்களுடன் இருந்த தொடர்புகள் குறைந்து செல்வதைக் காணலாம்.

மேலும் அக்குடும்ப பிள்ளைகளின் கல்வியில், விளையாட்டில், நண்பர்கள் வட்டத்தில் மிகவும் பின்னடைவு ஏற்படும். இக்குடும்ப சீர்கேடானது பிள்ளைகளின் அல்லது அந்தக் குடும்பத்தின் எதிர் காலத்தை கேள்விக்குறியாக்கி விடும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

எனவே ஒரு குடும்பத்தின் வளர்ச்சியானது அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொரு உறுப்பினர்களையும் சார்ந்து காணப்படுகிறது. எனவே குடும்பத்தில் ஒருவரி நடத்தையில் பிறழ்வு ஏற்பட்டாலும் அக்குடும்பமே சீர்கேட்டுக்கு உள்வாங்கப்பட்டு விடும். இதனால் ஏற்படும் உளப்பாதிப்பு சமூகத்தை சீராக்கவல்லது. அதனால் சமூகமே விழித்தெழு!

(03ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழ் உலக ...

தமிழரின் சிறப்பை எதிர்கால சந்ததியினரும் அறியவைப்பதுடன் அவரது பணியைத்தொடரவும் மேற்கொள்ளப்படும் முயற்சியாகவே நினைவுப் பேருரைகள் முன்னெடுக்கப்படுவதுடன் சமூகப்பணிகளிலும் ஈடுபடுகிறோம்.என உலகதமிழ வளர்பயில் அக்கறையோடு உழைக்கும் தனிநாயகன் அடிகள் அறக்கம் தனை தலைவர் திரு.அன்ரன் சின்னையா அவர்கள் தெரிவித்டதார்திருக்குறளின் சிறப்பு தமிழ்மொழிக்கு தமிழ்இனத்துக்கு மட்டுமல்ல உலகத்தில் உள்ள சகலமக்களுக்கும் பொருத்தமானதாகவே திருக்குறள் எழுதப்பட்டதை அதில் உள்நுழைந்தவர்கள் அனுபவிப்பார்கள்.திருக்குறளில் தமிழ்தேசியம் என்பது அரசியலாகப்பார்க்காது எப்படியான அரசாட்சி அமைய வேண்டும் அதில் உள்ளவற்றை ஆராய்ந்தால் எந்த நல்லாட்சிக்கும் இருக்கவேண்டிய பண்புகள் படிப்பினையாக தரப்பட்டுள்ளதை காணமுடியும்.தமிழ்மொழக்கு மட்டுப்படுத்தப்படாததாலோ திருக்குறளில் உள்ள எந்த வரிகளிலும் "தமிழ்" என்ற சொல் எழுதப்படவில்லை அதனாலே உலகில் இன்று இரண்டாவது அதிகமொழிபெயர்ப்பு பெற்ற நூலாக பல்மொழிகளில் சுவைக்க உலகமே ஏற்றுக்கொள்ளப்பட்ட நூலாகவும் வாழும் வாழ்வை செழிப்புடன் நல்ல ஆட்சிக்கு காட்டும் திருக்குறள் முன்னிலையில் உள்ளது என்றார்.யாழ்குரு முதல்வர் அருட்பணி ஜெயரட்ணம் அடிகள் உரையாற்றுகையில் உலக நாடுகளில் தமிழ்மொழி பயன்பாடு அருகிவருகிவருவதை கூறிக்கொள்வதை விட எமது நாட்டில் எப்படி பயன்படுத்தி சீரழிக்கப்படுகின்றது என்பதை சிந்திக்க வேண்டும்.எமது தாய்மொழியை நாமே சீரான முறையில் பளன்படுத்தாது அழித்து விடுகின்றோம்.என்ற ஐயம் எமது ஊடகங்களிலும் மேடைப்பேச்சுக்களிலும் உரையாடல்களிலும் சிதைக்கப்படுவதை கண்டுகொள்ளாது விட்டால் எமது சொந்தநாட்டிலே தமிழ் வாழுமா?தாழுமா?என்பதனை சிந்திக்கவேண்டியவர்களாக உள்ளோம்.தமிழ் ஆர்வம் மிக்கோரினால் மண்டபம் நிறைந்த அருட்பணியாளர்கள்,தமிழ் ஆர்வம் மிக்கோரால் தமிழ் தூது தமிழ்நாயகம் அடிகளாரின் நினைவுப்பேருரையின் மூலம் புத்துயிர்ப்புள்ள ஒன்று கூடலாய் அமைந்தது. இக்கருத்தமர்வுகள் பாடசாலைமட்டங்களிலும் நடாத்த முன்வந்தமை தமிழ்வளர்ச்சிக்கு தூண்டுதலாக அமைந்தது. இதனால் மேற்கொள்ளப்பட்ட தனிநாயகம் அடிகள் நினைவு சிறக்க வாழ்த்துகிறோம்.

(03ம் பக்கத் தொடர்ச்சி)

## ஆன்மீகக் கலை...

பொதுமக்களும் ஈடுபட்டு மாணவரின் நற்பண்புகளும் நமது கலை, கலாச்சாரம் வளர, முன்னெடுக்க சிறு சிறு குழு முயற்சிகளில் ஈடுபடுபவதில் நவீன காலத்திற்கேற்ப மாணவர்களுக்கு ஆர்வமூட்டவும், ஆரோக்கியமான மூத்தோர் அனுபவங்களைப் பகிரவும்



முன் செயற்படுத்துவதே எல்லோர் பங்கேற்பின் வெற்றியாகும் என்றார். நிர்வாகக் குழுவினரின் ஆலோசனைகளில் புதுவருட செயற்திட்டங்களை ஆராய்ந்து நடைமுறைப்படுத்துவதில் கத்தோலிக்க எழுத்தாளர் விபரங்களின் தொகுப்பு வெளியிடவும் வெளிவராது எழுத்துருக்களை நூலுருப்படுத்தி வெளியிடவும் சிறுவர்களை ஊக்கப்படுத்தும் நாட்டுக்கூத்தினை மூத்தோர் பயிற்றுவித்து அரங்கேற்ற ஊக்கப்படுத்துவதுடன் காலத்திற்கேற்ற போட்டிகள் நடாத்தவும் (தனிநடிப்பு, குழு நடிப்பு) சமய விழுமியங்கள் வெளிப்படுத்தும் போட்டிகள் மூலம் கிராம மட்டக் குழுக்களை ஊக்கப்படுத்துதல், பாரம்பரிய தலைவடிவங்களை புத்தூக்கப்படுத்துவதும், கத்தோலிக்கக் கலை இலக்கிய வட்டத்திற்கான நிரந்தர இடம் அமைப்பதுமென பல்வேறு நிலைகளை பயன்படுத்த முன் வந்த நிர்வாக உறுப்பினர்களின் ஆர்வம் நம்பிக்கையூட்டுவதாய் அன்மந்ததை பாராட்டி செயலாளர் யோசப்பாலாவின் நன்றிப் பகிர்வுடன் இனிதே நிறைவு பெற்றது.

**இளையோரின் விரக்தியும் விபரீதமும்**

இளையோரின் விரக்தி – நம்
உறவுகளில் விரிசல்
உறவுகளின் விரிசல் – நம்
உயிரல் சமூகத்தின் விரிசல்
சமூகத்தின் விரிசல் – நாம்
சார்ந்த கிராமத்தில் விரிசல்
கிராமத்தின் விரிசல் – நம்
நாட்டில் விரிசலும், விபரீதமும்

வழிகாட்டுதல் இல்லையேல்
வலுவிழக்கும் இளையோர்
வலுவை இழக்கும் இளையோரால்
வாழ்வைத் தொலைக்கும் சமூகம்
வாழ்வைத் தொலைக்கும் சமூகத்தால்
வாய்ப்புக்களை இழக்கும் கிராமம்
வாழ்வை இழக்கும் கிராமத்தால்
வாழ்வா? சாவா? என்ற நிலையில்

**- வி.ஜே.சுரேஸ் -**



கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற கலாபூஷணம் விருதை ராகஸ்வரம் கலைமன்ற தென்மோடி நாட்டுக்கூத்து அண்ணாவியார் ஏ.வரப்பிரகாசம் ஜனாதிபதி அவர்களிடமிருந்து விருதைப் பெற்றுக் கொள்வதைக் காணலாம்

# விளையாட்டு விளையாட்டிற்காக மட்டும் அல்ல

கிறிஸ்ரபெல்
சென்சாள்ஸ் மகாவித்தியாலய அதிபர்

**ஒரு மனிதனின் தலைவிதி அவர் தம்மைப் பற்றிச் சிந்திக்கும் விதமாகவே அமைகிறது ஏதேனும் ஒன்றை என்னால் செய்ய இயலாது என நான் எனக்குள் தினமும் சொல்லிக்கொண்டிருப்பின் ஒருபோதும் என்னால் அதைச் செய்வதற்கு இயலாமல் போகும் ஆயினும் அதை வெற்றிகரமாகச் செய்வதற்கு என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கையுடன் செயற்பட்டால் முன்னர் காணப்படாத இயலுமை என்னிடத்தில் ஏற்படும். - மகாத்மாகாந்தி -**

கற்றவர்கள் மட்டுமே கண்ணுடையவர்கள் என்று கற்றோரால் மட்டுல்ல மற்றோராலும் கருதப்படுகின்றார்கள். கல்லாதவர்கள் கண்கள் இருந்தாலும் முகத்திரண்டு புண் உடையவர்களாகவே கருதப்படுகின்றார்கள்

நமக்குத் தேவைப்படுவது எல்லாம் ஒழுக்கத்துடன் கூடிய கல்வியே ஆகும். ஒழுக்கத்துடன் கூடிய கல்வி மட்டுமே எம்மையும் வாழவைத்து பிறரையும் வாழவைக்கும்

ஒழுக்கம் இல்லாதவரிடம் இருக்கின்ற கல்வியால் பிறருக்கு தீங்கான விடயங்களைச் செய்கின்ற மனப்பாங்கு வளர்ந்துள்ளமையை நாம் கண்கூடாக பாரத்திருக்கின்றோம்.

கல்வியினுடைய நோக்கமே பிறருக்கு உதவி செய்வதே ஆகும் help ever hurt never

உலகத்திலே மனிதனாக பிறந்த நீ நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யாதிரு

நீ நன்மை செய்கின்ற போது உனக்கும் பிறருக்கும் நன்மையே உண்டாகிறது ஆனால் நீ தீமை செய்கின்ற போது அது உனக்கும் பிறருக்கும் தீமையாகவே அமைகின்றது

**இவை ஈழத்து கவி சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள்.**

அறம் செய்ய விரும்பு என்று கூறப்பட்டுள்ளது அதை போல நல்ல விடயங்களை செய்ய விரும்புவதே நல்ல காரியங்களை செய்வதற்கான அத்திவாரமாகும். நல்ல கட்டடங்களை கட்டுவதற்கு நல்ல அத்திவாரம் தேவை அதைப் போல நல்ல விடயங்களை விரும்புவதே சிறந்ததாகும்.

மாணவர்கள் உண்மை சொல்வதற்கு விரும்ப வேண்டும் உண்மையை பேச வேண்டும் உண்மையாக வாழவேண்டும் .

பெற்றோர்கள் பிள்ளைகளை நல்வழிப்படுத்தி அவர்கள் கற்பதற்கு தங்களால் இயன்ற வசதிகளையும் உதவிகளையும் செய்து கொடுத்தல் வேண்டும் அவ்வாறு செய்தால் மட்டும் தான் பிள்ளைகள் கல்வியை பெற்றவர்களாகவும் நீங்கள் நல்ல பிள்ளைகளை பெற்றவர்களாகவும் மிளிர முடியும் அவ்வாறு இல்லாவிடின் நீங்கள் பெற்றோர்களாக இல்லாமல் பல விடயங்களை இழந்தவராகி விடுவீங்கள்.

நாம் எப்போதும் நேர்ப்பாங்கான சிந்தனையுடையவராக வாழப்பழகுவோம் ever postive never necative

அன்பு, அறிவு, கல்வி, பண்பு, இவ்வாறான நேர்பாங்கான நல்ல அம்சங்களை பிறருக்கு கொடுக்க கொடுக்க குறையாதவை மாணவர்களாகிய நீங்கள் அனைவரும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்க வாழ்த்துகிறேன்

விளையாட்டுக்கள் மூலம் பல நல்ல விடயங்களை கற்றுக்கொள்ள முடியும் பெற்றுக் காள்ள முடியும்

வெற்றி தோல்வியை சமமாக மதிக்கின்ற பண்பை பெற்றுக் கொள்கின்றோம்

எமது உடலும் உள்ளமும் வளப்படுகின்றன பண்படுகின்றன

போட்டி விதிகளை மதிக்கின்ற விதிகளின் பிரகாரம் பங்கு கொள்கின்ற மனப்பாங்கை வளர்க்கின்ற தன்மை

வெற்றியை மட்டும் இலக்காக கொண்டிராமல் பங்கு கொள் மனப்பாங்கு முக்கியத்துவம் அளிக்கின்ற மனப்பாங்கை பேணுகின்ற தன்மை

எதிர்த்தரப்பு மாற்றுத் தரப்புப் போட்டியாளனை மதிக்கின்ற அவனுடன் நட்புரிமையுடன் பழகும் பண்பாட்டை வளர்த்துக்கொள்கின்ற தன்மை

விளையாட்டுவீரர்களை தாம் ஒரே அணியில் இருக்கின்ற போது இன,மொழி,மத,பிற பேதங்களை யெல்லாம் மறந்து அணிக்காக ஒற்றுமையாக இருக்கின்ற பண்பு விளையாட்டின் போது வளர்க்கப்பபடுகின்றது இதற்கு உதாரணமாக தடுப்பாட்ட போட்டிகளை பகிர்கின்றோம் விளையாட்டு விளையாட்டாக இல்லாமல் எம்மில் நல்ல பண்புகளை ஏற்படுத்துவதுடன் கலாச்சாரங்களை மதிக்கும் திறமை மிக்கவராக கற்றுக் கொள்ளஉதவுகிறது

## போதையின் உபாதை

கனவுகள் தொலைந்து
கண்ணீரில் கரைந்து
வீதியோரத்தில் வீழ்ந்து
மதியின்றித் திரியும் மனிதா

சத்தம் கேட்கிறது
யுத்தம் போல் உணர்கிறது
வீதியில் விளையாடிய பிள்ளை
குடிலினுள் மறைந்து நிற்கிறது

அப்பாவின் ஓசை
இடி மின்னல் போல் விழுகிறது
பாதணிகள் அணுகுண்டுகள் போல் தாக்குகிறது
இன்பமிழந்து இயைபிழந்து நிற்கிறது பிள்ளை

சொக்க இல்லம் நரகமானது
கண்ணீரே வாழ்வில் கதியானது
போதைக்குள் பேதையாகி
வீழ்ந்து போன மனிதா
வீழ்த்தி விட்டபய் நாளை உன் வாழ்வை.

ராஜசோபனா

# டுபாயில் தூள் பறக்கிறது

போதை வியாபாரிகள், பாதாள உலகக் கோஷ்டிகள் டுபாயில் பூண்டோடு அள்ளினதை எங்கள அரசியல் முதலைகளும் கலங்கியிருக்கிறதை இப்போ செய்தியாகக் கசிகிறது. எல்லோரையும் இலங்கைக்குள் கொண்டு வர அவசரப்படுத்துகிறதும் ஏதோ கடினமான தீர்ப்பு வழங்குவதற்கு அல்ல. அவர்களுக்காகப் பிணை எடுக்க பலரை அனுப்பியும், பல வழியில் முயன்றும் அவசரப் படுத்துவதற்கான காரணம் என்ன?

பாதாள உலகையே நம்பிப் பிழைக்கின்ற எமது அரசியல்வாதிகள் அவர்களைத்தப்ப வைக்கத்தான் இந்த நிலையில் அவசரக்குழுக்கள் பிணையெடுக்கச் செல்வதாக அவதானிகள் தெரிவிக்கிறார்கள். விருந்துக்கு சென்றவையள் தூள்பறக்க சுற்றி வளைச்சவைகளின்ர உள்ளூர் தூள் வியாபாரிகள் பாதுகாப்பைத் தேடி பதுங்கி வாழ்வது, ஓடி ஒளிவது, தேடல் தொடர்வது செய்தியாகிறது.

இறுதியில் கிலோக்களெல்லாம் கிராம்களாகி ஆளில்லாத வாகனங்களும், வீடுகளும் மிச்சமாகும். இது தான் நம்ம நாட்டின் சுற்றி வளைப்பின் இறுதி முடிவுகளாகும். பணம் பாதாளம் வரையும் பாயும் என்பது இதிலே தெரியவரும் பொறுத்திருந்து பார்க்கலாம்.

## இறந்த பிரதேசத்திற்கு நிலபாவாடை விரிப்பது நியாயமா ?

சிரஞ்சீவி புண்ணியசகாயன்

நிலப்பாவாடை என்பது நிலத்தின் மேலே விரிக்கின்ற தூய வெள்ளைத்துணிக்கும் , கம்பளித்துணிக்கும் பட்டுத் துணிக்கும் பொருந்துவதாகும் நிலப்பாவாடை எச் சந்தர்பத்தில் விரிப்பது என்றால் ஒரு ஜமீந்தார் வரும் போதும், நிலப்பிரபு வரும் போது, அரசன் வரும் போதும், ஒரு நாட்டின் தலைவர் வரும் போதும், உயர் குலப்பிரமுகர் வரும், போது விரிக்கப்படும். இது எதனை குறிக்கின்றது என்றால் ஏனையவர்கள் அதாவது குடிமக்கள் அடிமைகள் என்பதுவே அதன் தாற்பாரியமாகும் இதை விட மக்களுள் எல்லோருமல்ல ஒரு சிலர். தம்மை பிரபல்யப்படுத்தி உயர்ந்தவர்கள் என்று காட்டுவதற்கும் ஏனையவர்களை அடிமைகள் என்று எடை போடுவதற்கும் வசதியாக நிலப்பாவாடை விரித்து பவனி வருபவர்கள் நிலப்பாவாடை விரிப்பவர்கள் கூலியாளாகவும் சித்தரிக்கப்படுபவர்கள் திருமண வீடுகளில் மணமகனும் மணமகளும் வரும் போது நிலப்பாவாடை விரித்து சில இடங்களில் வரவேற்கப் படுகிறார்கள் இது ஒரு புறமிருக்க மரணவீடுகளிலும் பிரதேம் சுடலையை நோக்கி புறப்படும் போது வீதி தோறும் நிலப்பாவாடை விரித்து பிரேதத்தை கொண்டு செல்வது வழக்கத்தில் இல்லாத போதும் யாழ்மாவட்டத்தில் அன்மையில் ஒரு செத்தவீடு நடை பெற்றது பிரேதம் முக்கியமான சந்தியிலிருந்து சுடலைக்கு போகும் வரையும் பிரேதத்திற்கு நிலப்பாவாடை விரித்து உரியவருக்கு மதிப்பும் கௌரவமும் அளிக்கப்பட்டது யார் நிலப்பாவாடை விரித்தது என்றால் இறந்தவருடைய பிள்ளைகள் அல்ல அக்குடும்பத்திற்கு அடிமைகளான நிலப் பாவாடைக்குடிமக்களேயாவர் எங்களது அழுக்கான உடுப்புக்களைத் துவைப்பதுவே சலவை செய்வோருக்கு நாம் கொடுக்கும் தண்டனையாகும் அப்படி இருக்கும் போது சலவை செய்யும் குழுவினரைக் கொண்டு அதுவும் ஒரு செத்த பிரேதத்தத்திற்கு நிலப்பாவாடை விரித்த கொடுமைக்கு எவரேனும் குரல் எழுப்பியதாக இதுவரை இல்லை அது ஒரு கொடூரமான அடிமைத்தனம் அல்லவா? நிலப்பாவாடை விரித்து ஒரு பிரேதத்தைக் கொண்டு வந்தால் பிரேதத்திற்கு சொந்தக்காரர் உயர்ந்த வசதியாகி விடுவார்களா? விரிப்பவர்கள் அடிமைகளா? இந்த காரியத்தை செய்தவர்கள் யார் என்பதை யாழ்ப்பாணசமூகம் கண்டும் காணாதது போல கைகட்டி பார்த்ததும் மட்டுமல்ல கண்டிக்கத்தவறி விட்டது நல்லூர் கடலைக் கொட்டைக்கு சத்தம் போட்ட கூட்டம் இந்த படுபாதகமான செயலுக்கு மௌனம் சாதித்தது என்றால் நல்லதுக்கு இல்லை சம்மந்தப்பட்ட சமூகம் இனிமேலாவது இதற்கு தடைவிதிக்க முயற்சிப்பார்களா?

# அறிவில்லாதவன் பதில்கள்

அறிவில்லாதவன் பதில்கள்
28/1, ஏ.வி.வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

★ **ஏறத் தெரியும் இறங்கத் தெரியாது அது என்ன தெரியுமா?**
சு. பால குமார் பண்டத்தரிப்பு

டீசல், பெற்றோல் நம்ம நாட்டில விலை வாசி ஏற உயருது பஸ் ரிக்கற் விலைகள் இறங்கத் தெரிவதில்லை வியாபாரங்களுக்கு ஒரு உதாரணம் எண்ணை விலை கூட, பால் உணவுப் பொருள் விலை ஏறிச்சே எண்னை விலை குறைசப்போ குறஞ்சுதா இதுக்குத்தாரீன சங்கம் வைத்து இறங்க முடியல்லையே மக்கள் துன்பம் தாங்க முடியல்ல

★ **காதலித்தவர் எல்லாம் கலியாணம் முடிக்கிறார்களா?**
க. கண்ணன் கட்டுவன்

இருமனம் இணையும் திருமணத்திற்காக காதலித்திருந்தால் அது நிறைவேறும் ஆனா காதலித்த பின் வீட்டாரிடம் கேட்டுப் பாருங்க என்று சீதனத்துக்காக ஏங்குவதால் அது வியாபாரமாவதால் காதலும் இப்ப சந்தை பொருளாகி மாறிவிட்டது கண்ணா.

★ **எங்கட வாழ்கை காதலித்து கலியாணம் வரை போனது இப்போ எதிர் பாரப்புக்கள் ஏமாற்றத்தை தருகிறதே ஏன் ?**
எ.சுந்தரேஸ் கரவெட்டி

காதலிக்கும் போது கண்டோஸ் கொடுத்து விட்டு கலியாணத்தின் பின் கத்தரிக்காய் வெண்டிக்காய் வாங்கி கொடுப்பது ஏமாற்றம் தானே வரும் கொஞ்சம் கலகலப்பாக உழைத்து மகிழ்விச்சா பரவாயில்லை அதை விட அதிகம் எதிர்பார்ப்பு அயலவர்களை ஒப்பிட்டு ஒப்பாரி வைப்பது தானே எங்கடையளின்ட ஏக்கமாக இருக்குது சுந்தர்

★ **வீட்டில் பொங்கல் பொங்கல்லையோ நீங்க ?**
T.R கமலா - அரியாலை

விதைச்சாதானே அறுவடை செய்யலாம் அறுவடை செய்தவர்கள் தானே பொங்கலாம் எண்டா நாங்க யாரப்பா பொங்க முடியும் ? ஏதாவது பயிர் வளர்த்தால் கூட நம்ம நாடு மகிழ்ச்சியில் பெருகுமே அது தான் நான் கூட வீட்டில பயிர்வைச்சு அடுத்த ஆண்டு பொங்கலாம் என எண்ணுறன் உங்களால் முடிந்தது என்னோடு சேருங்க நாம் பயிர் வைச்சு பார்ப்போம்

★ **எங்கட நாட்டில எல்லாமே இரண்டு தானா?**
ந. சுந்தரலிங்கம் - மல்லாவி

இது ரீவீல வாற நாடகம் போல இரண்டு வைச்சிருக்கிறது தப்பில்லையாச்சு எங்கட நாடு இரண்டு பிரதமரை இரண்டு எதிர்கட்சி தலைவர்களை கண்டு சாதனை படைத்து 2108 ஆண்டு கடந்து சென்றது இது போதும் இனியாவது மக்களின்ர தேவைக்கு சேவையாற்றினா அதுதான் மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கும் சுந்தர்

★ **நம்ம நாட்டில யாரு எதிர் கட்சி யாரு ஆளும் கட்சி சொல்லுங்க பாப்பம் ?**
ஓ.பாஸ்கரன் - பண்டத்தரிப்பு

ஜனாதிபதி சுதந்திரக்கட்சித்தலைவர் ஆனா அவரிடம் மந்திரிப்பதவிகள் உண்டு இவர் ஆளும் கட்சியான மந்திரிப்பதவியை வைத்திருந்தால் கூட்டரசுதானே நடக்குது எதிர் கட்சியான சுதந்திரக்கட்சி தானே இப்ப எதிர்கட்சி அப்ப ஜனாதிபதி நடுநிலையாளரா ?கட்சி சாந்தவரா? "வண்டியோட சக்கரங்கள் இரண்டு மட்டும் வேண்டும் அதில் இரண்டில் ஒண்டு விலத்தி சென்றால் எந்த வண்டி ஓடும்......? இதுதானே நம்ம நாட்டு நல்லாட்சி இவை யாரை பாதிக்கும் சொல்லுங்க பாஸ்கரா?

( தொடர்ச்சி பக்கம் 03)

# தவணை கேட்டவர்கள் ..

அமெரிக்காவில் உள்ள ஐ.நா பாதுகாப்பு சபைக்கான சிபார்சை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை பிரித்தானியா முன்னெடுக்க வேண்டும். மற்றும் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்றுவரும் இனப்படுகொலை மற்றும் இறுதி யுத்தத்தின் நேரடிச் சாட்சிகளை பிரதமர் நேரில் சந்தித்து அவர்களுடைய நிலைப்பாட்டைக் கேட்டறிய வேுண்டுமெனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பாக ஐ.சி.பி.பி.ஜின் ஊடக ஒருங்கிணைப்பாளர் அல்வின் சுகிர்தன் ஊடகங்களுக்குத் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜெனனீவாத் தொடரில் பிரித்தானியா தலைமையில் இலங்கை குறித்த பிரேரணை கொண்டுவரப்படும் நிலையில் இம்முறை இலங்கை மீண்டும் காலஅவகாசம் கோரும் பட்சத்தில் மீண்டுமொரு காலஅவகாசம் பிரித்தானியா வழங்கக்கூடாது எனவும், இலங்கை அரசு தமிழ்மக்களுக்கு எதிராக அமைத்த போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகள் தொடர்பில் இலங்கையை சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்தக் கோரியும், அல்லது அதுபோன்றதொரு நம்பகரமான சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை நிறுவுமாறு வலியுறுத்தி நாம் பிரதமரிடம் மனுவொன்றினைக் கையளித்துள்ளோம்.

பொறுப்புக் கூறல் தொடர்பான இலங்கை அரசுக்கு ஐ.நாவினால் கால அவகாசம் வழங்கப்பட்ட போதிலும் சிங்களப் பேரினவாத அரசு அதனைச் செயற்படுத்தத் தவறி வருகிறது. மாறாக யுத்தக் குற்றமிழைத்தவர்கள் அடையாளம் காணப்பட்ட அதிகாரிகளுக்கு உயர் பதவிகள், அமைச்சுப் பதவிகள் வழங்கி அவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளையே செய்துவருகின்றது.

ஆனால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் தொடர்ந்தும் காணாமல் போன தமது பிள்ளைகளுக்காகவும், இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது காணிகளுக்காவும் ஈழத்தில் தொடர்ந்து வீதிகளில் போராடி வருகின்றது. காணாமல்போனோருக்கான அலுவலகம் கூட சர்வதேசத்திற்கான வெறும் கண்துடைப்புக்காகவே இயங்கி வருகிறது என அவர் தெரிவித்தார்


மனித உரிமைச் செயற்பாட்டாளர் கீத் குலசேகரம் அவர்களின் வழிகாட்டுதலில் பற்றிக் பிரான்சிஸ் வசந்தராஜன் தலைமையில் ஐசிபிபிஜின் ஊடக ஒருங்கிணைப்பாளர் பற்றிக், அல்வின், சுகிர்தன் மற்றும் செயற்பாட்டளரான நிறோஜன், பாலசிங்கம், செல்வச்சந்திரன், கணேசபிள்ளை, சைலிசன், சிதம்பரநாதன், நந்தகோபன், சிவராஜ் ஆகியோரால் பிரதமர் வாசஸ்தலத்தில் குறித்த மனு கையளிக்கப்பட்டது.



யாழ்.பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற முன்னாள் நூலகர் திருமதி றூபவதி நடராஜா அவர்களின்

# "யாழ்ப்பாணப் பொதுநூலகம் அன்றும் இன்றும்"

என்னும் நூல் வெளியீட்டுப் பதிவுகள்









## போதைதவிர்ப்பு விழிப்புணர்விற்கான குரல்கொடுப்பு



யாழ். மூர்வீதியில்...





நெடுந்தீவு பிரதேசசெயலக முன்றலில்...

## எமது மண்ணில் ஐ.பி.சி தமிழ் 50 ஆளுமையாளர்களுக்கான விருதினை 27.02.2019ல் வலம்புரி விருந்தினர் விடுதியில் வைத்து கௌரவித்த சாதனையாளர்களுக்கு யாழ்களரியின் வாழ்த்துக்கள்









## மகளிர் தினத்தை முன்னிட்டு நாவாந்துறை R.C பாடசாலை மாணவர்களின் மனப்பதிவுகள்



செல்வி உதயகுமார் நிலோஜினி



செல்வி இ.பிரியா



செல்வி சுயானா சுதர்சன்

இப்பத்திரிகை ஜோ.ஜெஸ்ரின் என்பவரால் காந்தள் புலம்பெயர் இளையோர் அனுசரணையில் சுன்னாகம் கே.கே.எஸ் வீதியிலுள்ள முத்து பிறின்டேர்ஸ் நிறுவனத்தில் 01.03.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது